
ஸ்வய
அநுபவம்
II
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# ஸ்வய அநுபவம்

இதழ் II

# பொருளடக்கம்


1. பாடல் 57----------------------------------------------------78
2. பாடல் 59----------------------------------------------------85
3. பாடல் 62----------------------------------------------------89
4. பாடல்கள் 63 & 64----------------------------------------94
5. பாடல் 66----------------------------------------------------101
6. பாடல் 68----------------------------------------------------108
7. பாடல் 70----------------------------------------------------113
8. பாடல்கள் 73 - 77----------------------------------------118
9. பாடல் 78----------------------------------------------------124
10. பாடல்கள் 80 & 81 ----------------------------------------132
11. பாடல் 82----------------------------------------------------140
12. பாடல்கள் 85 - 92----------------------------------------142
13. பாடல் 94----------------------------------------------------149
14. பாடல்கள் 95 & 96----------------------------------------154


எல்லாம் நீ!



(ஸ்நேகிய வாக்கை)

ஸத்யம் பேசு. ஓம் தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்!"

"ஸ்ரீ குரு திருவடி தான்!"

"நம்பினோர் கைபதியில்!"

"தெய்வம் மறைந்தாலும்!"

"யுக பாவம் தீர்த்த பதி!"

"ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெயராம்."

"ஓம்"

"அகம் பிரம்மம், ஜகம் பிரம்மம்"

"அகமே ஸ்வரூபம்!"

"ஜகம், பரமம், ஜீவர்களும்,"

"சிறிதும் இல்லை!"



உ

பாடல் 57.

(1) "1984 லக்ஷம் ஜீவ கோடிகளையும்,

"ஜீவ" சொரூபமாகவும் (ஆத்மாவாக உணராமல்)

"ஜாக்ரதனையே" (தோஷ குண சொரூபமாக)

காண்பது (உணர்வதுவே) "துவைத"

விருத்தியாகும்!

(2) "மனம்" படைத்த "மனதே" இணைத்தமட்டும்,

சாட்சியாக (காண்பதுவே) (ஸ்ரீ பகவத் சொரூபமாக)

"உணர்வது சாக்ஷி" விருத்தி ஆகும்.

(3) மேலே கூறிய, 84 லக்ஷம், ஜீவ கோடிகளையும், மனித இனத்தையும் சேர்த்து, மற்றும் ஜட, கட, படாதிகளையும் நாவாதீத அந்த "ஒன்றுகலும்"! அங்கு, எல்லாமே நாமாகவும், நாமே எல்லாமாகவும், ஆனந்தமாக உணர்வது, (காண்பதுவே) சர்வசாட்சி என்ற "அகண்டபாவனை" என்ற, அகண்ட விருத்தி என்று ஸ்ரீ மஹான்கள் கூறுவர்.



உ

79

பொருள்:— (1) "துவைத" விருத்தி என்பது, "மனதின்" சுரூபாகும் (சொல்வதும்) வேறுபாகும் (அப்படி சொல்வதை பேதப்படுத்துவதும்) ஆகும். இதனால், "தோஷ" குணங்கள், கல்பிக்கப் படுகிறது. அத்தோஷ குணங்களால், புண்ணிய பாபம், என்ற இருவினை, பின்னவிடுகிறது. அப்பின்னலால், ஜனன மரண, அழல் உண்டாகி, கற்பனையின் ஜீவன், நடும் அவஸ்தைப் படுகிறான்.

(2) சாட்சி விருத்தி:— இரக்கமனம் படைத்த "மனிதன்" மட்டும். அம்மனதைக் கொண்டே, ஸ்ரீபகவானை உணர்ந்து, ஸ்ரீபகவான் நிலையைப் பெறமுடியும். அதாவது, அறியாமையின் குணமான, அஹங்கார மமகாரங்களை, முழுமையாக நாசம் செய்து. அதாவது, நான், என்றும், என்னுடையதை முழுமையாக கெடுத்து, எல்லாம் நீயே, எல்லாம் உன்னுடையதே, என பிரமாணமாக ஆக்கி, அத்தன்மையினால், "ஜீவகனாகனந்து"! அதாவது, ஜீவத்தன்மை, முழுமையாக அற்றுப் போவது, "சாட்சி" பாவனை என்றும், அதுவே.



உ

(80)

ஸ்ரீ பகவான் நிதி என்றும், அதுவே,
பேரானந்த நிதி என்றும்; அதுவே
உயர்ந்த "பக்தி" என்றும் ஸ்ரீமஹான்கள் சொல்வர்.
இந்த சாட்சி நிலை என்பது, "சமபாவனை" என்றும் சொல்லலாம்;
அதாவது, விருப்பு வெறுப்பு, பேத திருஷ்டி, குற்றம் குறை
காணமை, இதன் அடிப்படை, ஓர் நாம ரூப மின்றி,
ஸ்ரீ பகவான் பொருள், ஸ்ரீ பகவான் செயல், அவனன்றி
அணுவும் அசையாதென்ற நிலையில், "ஜீவ
கர்த்தத்வம்" முழுமையாக நாசமான நிலை,
என ஸ்ரீமஹான்கள், சொல்வர். ஓர் ஆத்ம சாதகனின்,
இந்த சாட்சி நிலை, வேரூன்றவே போதும்! அகண்ட பாவனை
என்ற, அகண்டாகார விருத்தி, இயல்பாகவே கிடைக்கும்;
ஆனால் இங்கு, ஓர் முக்கியம், என்ன வென்றால்?
"தாஸ்" விருத்தி என்ற, தாஸ பாவனை, ஜீவத்தன்மை
மட்டும், கூடவே கூடாது என்றும், ஆனால் "தாசி"
விருத்தி என்ற, ஸ்ரீ பகவான் பாவனையில், "வந்து
வந்து" போகலாம் என்றும், சாதனையாளன்,
நிரந்தரமாய், இங்கு இருக்கக் கூடாது என்றும்,
அனுபவ ஸ்ரீமஹான்கள், சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன்.



உ

சாட்சி நிலையில், வந்து போவதால், இந்த சாட்சி பாவனையானது, இவனை பிடிக்காத நிலையில், இவனுக்கு ஈசகர்த்தத்துவமும்! நாசமாகும்! (81)
என்றும் ஸ்ரீமஹான்கள், சொல்லக் கேள்வி!

காரணம் :- இங்கு லோகமாயாவின், "**மயக்கம்**" உண்டு என்றும், சொல்வர். ஓர் ஆத்ம ஞானியின் அனுபவமானது, "**நிர்குணமாக**" சகுண உபாசனையும், இருக்கலாமேதவிர, "**ஏகுணமாகிய**" ஸத்வகுணமும் இருக்க வாகாது என்றும் கூறுவர்! ஸ்ரீபகவானின் ஸத்வகுணமும், "**கிரியா**" நிமித்தமாகவே! அதாவது பிரவர்த்தியின் நிமித்தமாக இருப்பதால், அதுவும் கூடாது! ஓர் ஆத்மசாதகன், "**வரி**" வடிவிலும்! "**வாக்கு**" வடிவிலும்! ஆத்ம ஞான, அனுபவ பாட நிமித்தம் வந்து ஸ்ரீபகவான் நிலையில் விளக்கம் தந்து விட்டு உடனே அகண்டபாவனைக்கு, சென்று விட வேண்டும். ஓர் ஆத்ம சாதகனுக்கு, அகண்டபாவனையென்ற, அகண்டவிருத்தி என்ற, ஸர்வசாட்சி விருத்திதான் **ஸ்வாபாவிகமாயும்! நிரந்தரமாயும்!** இருக்க வேண்டும் என்றும், இருக்க இயலும் என்றும். அதிலிருந்தே "**அகண்டாகாரம்!**" பருகிய வண்ணம், அதுவே நானாய்! நானே அதுவாய்! இருக்கலாம் என, ஸ்ரீ அனுபவ மஹான்கள், சொல்லக் கேள்வி!



அகண்ட விருத்தி என்பது, முன் விளக்கம் கூறிய நிலையில், அனைத்து கோள்கள், அனைத்து சந்திராதி சூரியன்கள், அனைத்து ஜீவ கோடிகள், அனைத்து ஜடபடாதிகளில் அனைத்தையும் ஒன்றாக சேர்த்து, "எல்லாம் ஒன்றே" என ஐக்கியப்படுத்திய நிலையில், நாம் "அதற்கு" அன்னியமில்லை என்றும், அது "நமக்கு" அன்னியம் இல்லை என்றும், பேரிடி விழுந்தாலும், உடலே இழந்து நாசமானாலும், மேலே கூறிய அனைத்து, "நாமரூபங்களும்" நாசமானாலும், யாம் விநசன் (அழிவில்லாதவன்) என்ற திடப்பிரக்ஞையோடு, ஸ்வயமாய், ஸ்திரமாய், "பிரம்மானந்த" மயமாகவே இருப்பது, அகண்டாகார விருத்தியாலே, அந்தப்பிரம்மானந்த ஸ்வய அனுபவத்தை, அகண்டைக ரஸத்தை / அகண்டாண்ட "பாவனையில்" இருந்து கொண்டே வருகவாம் என்றும், அந்த ஸ்வய அனுபவத்தை ஸ்ரீமஹான்கள், எப்படி சொல்கிறார்கள் என்றால்?

(௮௩)



உ

தேன் பிரம்மம் ஆகும்!
நாமரூபம் ஜகம் புஷ்பம் ஆகும்!
தேனைப் பருகிக் கொண்டு,
நாமரூபத்தைத் தாண்டுவதே சாதனை!

அகண்டாத்ம பாவனையில் இருந்து, அகண்டாகார விருத்தியான்ற கொண்டே, "அகண்டைக" ரஸம்!

பருகும் விதம்:- அத்வைதத்தை ஒன்றை ஒரே வார்த்தையில், "எல்லாம் ஒன்றே" என்றும், அன்னியம் ஏதுவும் இல்லை என்றும், அதுவே நாம் என்றும் உணர்ந்து, அனைத்து நாம ரூபமும் "மாயைமய" கற்பனை என்றும், கற்பனை ஒழிந்த இடத்தில், அவ்வொன்றே ஸத்தியம் என்றும்; அந்த ஒன்றின் விளக்கத்தை, எப்படி ஸத்தியப் பிரமாணம், செய்கிறார்கள் என்றால்?

அனைத்து "நாமரூபங்களும்"! விதவிதமான! ரகரகமான! கவர்ச்சியான! "கோடானுகோடி மலர்கள்" ஆகும். ஆனால் மேலே சொன்ன, அக்கோடானுகோடி மலர்களிலும், தனியூண்டு; "தேன்" இருப்பது ஸத்தியமே! அனைத்து நாமரூப மலர்களிலும் பேதம் உண்டு! ஆனால் அங்கோ, தேனபேதம் இல்லை என்பதே ஸத்தியம்!



உ

மேலே கூறியவைகளில் உள்ள,
தேக மட்டும், ஓர் "ஞானி" பருகு கிறான்.
அநித்ய நாமரூபங்களிலும் "பாலும்" பருகும்,
அன்னம் பக்ஷியைப் போல், பருகிக் கொண்டு அதாவது
பிரம்மானந்த ரஸத்தை மட்டும், பருகிக் கொண்டு;
நாமரூப, ஜீவத்தை "ஜகத்தை"
விட்டு விடுகிறான்.

இந்த நிலை;
அகண்டாகார, விருத்தியாகிய; அதாவது அகண்ட
பாவனையாகிய; அதாவது, சர்வ சாட்சி விருத்தியாகிய;
"பிரம்மாத்ம பாவனையில்"!
இருப்பவர்களுக்கு, மட்டுமே ஸாத்தியமாகும்!
ஏனையோருக்கு, ஸாத்தியமாகாது!
இதைத்தான், ஸ்ரீ ரிபு அழகாகச் சொன்னார்!
இம்மூன்று விருத்திகளில் (பாவ விருத்தி! சாட்சி விருத்தி!
அகண்ட விருத்தி!) இரண்டை (பாவ விருத்தியையும்!
சாட்சி விருத்தியையும்!) நீக்கி விடு! உன்னை,
"அது" ஆக்கும்! அகண்டாகார விருத்தி தன்னை
ஆகும்!
அனவரதமும், ஆதரவாய், அப்யாசிப்பாய்!
எனச் சொல்லி, அகண்டாகாரத்தை சுட்டிக்காட்டுகிறார்!
இதுவே, அப்பாடலின், ஆரண விளக்கம் ஆகும்!



பாடல் ௫௯.

சிரவணத்தை "பொருந்தி" செய்!
அதனால் அஸம்பாவனை அழியும்!
மனனத்தை "வருந்தி" செய்!
அதனால் சம்சயம் என்ற, சந்தேகம் அழியும்!
நிதித்தியாசத்தை, "விரிந்து" செய்!
அதனால் விபரீத பாவனை, ஒழிந்து நாசமாகும்!

பொருள்:— (1) சிரவணத்தை, பொருந்தி செய்:—

சிரவணம் என்றால், காதுகளால், "கேட்பது" ஆகும். வேத வேதாந்த, சாஸ்திர கருத்துக்களை, "குரு" மூலமாக, கேட்க வேண்டுமே யல்லாது, நாமே வலிவடிவால், எந்த நூல்களிலிருந்தும், படித்து உணர்ந்து ஏற்று, அனுபவிக்க முயலுதல் கூடாது, என ஸ்ரீமஹான்கள், தம் அனுபவத்தில் கூறுவர். ஆதலேதான், அனுபவ வாசகம் சொல் வருவது:— "கற்றலிற் கேட்டல் நன்று"! என்பார்கள்!



கலிதோஷ குணங்களை (86)
நீக்கியும், அஞ்ஞத்தையும்
இறை, குரு, பர உணர்வோடு,
பொருந்தியும், பொருத்தியும்,
ஒன்றாய் பொருந்தும்,
செய்வதே சிரவணத்தின் தன்மையாகும்.

அதாவது, நீயாக படிக்காதே என்றும்,
பெரியவர்கள் வாயிலாக, கேட்டு.
அவர்கள் சொல்வதையோ, அவர்கள் தொடுப்பதையோ,
திரும்ப திரும்ப படித்து "மனனம்"
செய்யவாம். அப்படி செய்தால் "பலனும்"
கிடைக்கும், "பலமும்" பெறலாம்.
பவன் என்றால், நீ படித்ததின், நீ கேட்டதின் "பயன்" ஆகும்
பலம் என்றால், சார்ந்து அறியும் அறிவின் "பலம்" ஆகும்
இப்படி ஸத்குரு வாக்கால், பெறும் அத்வைத
அனுபவ பாடத்தை, ஜக ஜீவ ஈஸ்வராதிகளின்,
"நாமரூபங்கள்," அஞ்ஞதையும்,
எல்லாம் ஒன்றே, என்ற நியதியில், குற்ற உணர்வு
களையும், அதனால் தோன்றும், பேதாபேத பேதங்களையும்,
அடியோடு நாசம் செய்து "பொருத்தியும்"
"பொருந்தியும்" செய்வது, சிரவணம் ஆகும்.
இன்பது பொருத்துவதாகும், பின்பது பொருந்துவதாகும்.



# உன் மனத்தை வருந்தி செய்:-

நீ என்னதான், பொருந்தியும்! பொருந்தியும்!
முயற்சி பண்ணி, எல்லாம் ஒன்றே! என்றும்,
இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என்றும்,
அனுபவம் கூட்டினாலும், பல காலம், பல நிலைகளில்,
பழகிய **பழக்க** (பேச்சு) **வழக்கமும்** (செய்கை)
சாமானியமாகப் போகாது தான்! இதன் ஒரே வழி!
ஸ்ரீ பகவான், "**கருணையை**" பெறுவது ஒன்றே வழி!
முன் பல இடங்களில், கூறிய நிலையில், சர்வார்ப்பணம் ஒன்றே! அதன் வழியாகவே! இங்கு உன் மனம்
"**வருந்தி**" உருகி, அழுது, கண்ணீர் பெருகி,
நைவன்றி, பொருந்தும் நிலை கூடாது! இதைத்தான்
"**அழுதால்**" உன்னைப் பெறலாம் என்றும், அதையும் பெறலாம் என்றும்,
அனுபவ ஸ்ரீமஹான்கள் கூறுவர்! இதைத்தான், நையாத மனிதர்க்கு, உய்யாது கண்டு கொள்! என்றும்,





உ

தன் அனுபவத்தை, சொன்னார்கள்! இங்கு, ஸ்ரீ ஸத்குரு வாயிலாகவும், வரி வடிவிலும், கேட்ட அனுபவ பாடத்தை, வாய்ஞான மாக கொள்ளாமல், உடல் உலக நாம ரூபத்தை, "இல்லை இல்லை!" அதுவே "ஸத்யம்" அதுவே நாம்! நாமே அது! என்ற பிரம்மான்ம பாவனையை தைலதாரை போல் "மனனம்" செய்ய வேண்டும்.

(3) நிதித்யாஸத்தை, விரிந்து செய்:— நிதித்யாஸம் என்பது, "அனுபவமாகும்"!

இது மௌனம் கவக நாஸ்தி! என்பதில் முடியும்! இதில் எங்குமாய்! எல்லாமாய்! ஏகமாய்! அந்த "ஒன்றே" இருக்கிறது என்றும், அந்த ஒன்றுக்கு, அன்னியமாய், "எதுவுமே" இல்லவே இல்லை யென்ற திட வுணர்வோடு; சந்தேக கலக்க பயம் இன்றி, செய்த நிலையில், விரிந்து பரந்த அந்த ஒன்றுக்கு, நாம் அன்னியமில்லை யென்றும், அதுவே நாம்! நாமே அது! என்ற "பரிபூரணத்வம்" பெறுவது விரிந்து செய்யும், நிதித்யாஸம் ஆகும்!



உ



"பொருந்தி" செய்வதால் தேவை இல்லாத கோஷ

"அசம்பாவிதம்" குறைந்து குறைந்து, மறையும்!

"வருந்தி" செய்வதால், விபரீத கோஷ,

"சந்தேகம்" அழிந்து நாசமாகுமே!

"பொருந்தி" செய்வதால், எல்லாம் ஒன்றே!

என்ற நிலையில் இருப்பது ஒன்றே! நடப்பது நலமே!!

அதுவே நாம்! நாமே அது! என்ற பூரணத்துவம் பெறுவதால்,

விசித்திர, விரோத, விகார, விகல்ப "விவகாரம்"

(பிரச்சனைகள்) நாசமாகி நாம் அதுவாகவே இருப்போம்!

அந்த நிரந்தரமான, பரப்பிரம்ம சாக்ஷாத்காரம்

முயற்சி, பயிற்சி இல்லாமல் இயல்பாக சாத்தியமாகும்.

பாடல் 62.

ஒரு சப்தத்தை விரும்பி சொல்லாதே!

(௨) பலருடைய " " கேட்காதே!

(௩) ஒருவார்த்தைக்கு "பலபல" அர்த்தம் பிரித்துப்

படிக்காதே! கேட்காதே! சந்தேகிக்காதே!



உ (௨௦)

பொருள்:— (1) சப்தத்தை விரும்பி சொல்லாதே.

(A) ஒருவருக்கு, போதிக்க வேணுமென்ற, ஆர்வத்தில், நிறைய "போதிக்காதே"! அங்கு உன் "சக்தி" விரயமாகும்!

(B) உன் பேச்சை குறைத்து, உன் சாதனையை மட்டும் செய்து வா! உன் அமைதியின் சாதனையே, அவருக்கு, "போதனை"யாக அமையும்!

(C) அங்கு உன் சக்தி, விரயமாகாத் தன்மையினால், உன்னுடைய ஆத்மசக்தி, (ஆத்மஒளி) அவனுக்கு, வழிகாட்டியாய் அமையும்!

(D) சம்சாரம் என்பது, ஓர் அடர்ந்த "காடு" என உணர்! அதன் உள்ளே, புகுந்து விட்டால், வெளியே வருவது, மிகமிக கடினம்!

(E) இறைகுரு உணர்வோடு, இருக்கும் உனக்கு, அவனிடம் பேச வேண்டிய, நிர்பந்தம் ஏற்பட்டால் மட்டும் இதமாகவும் (இனிமையுடனும்) மிதமாகவும் (குறைவாகவும்) இறைகுரு உணர்வோடு, "சுருங்கு".



# இ

(அ)

"பேசு!" வலியுறுத்தாதே! அங்கு வேகம் வேண்டாம்! கண்டிக்காதே! தண்டிக்காதே!

அவன் மனதை "புண்படுத்தி" விடாதே!

(இ) பலரிடமும், சப்தத்தை, விரும்பி கேட்காதே!

(A) தன்னை அறியும் அறிவு என்ற, "ஆத்ம ஞான!" பாடத்திற்கு மட்டும், பலரிடம் பல குருமார்களிடமும் பாடம் கேட்காதே!

(B) மற்றும் 15 கலைகள் (பாடத்திற்கு) பலரிடமும், பாடம் கேட்பதில், தோஷமில்லை! ஆனாலும்? "அனுபவம்" பெற முடியாது!

(C) ஆத்ம ஞான பாடம், பலரிடமும் கேட்டால், மேலும் மேலும், "சந்தேகம்" தான் தோன்றுமேயன்றி, "தெளிவு" பெற முடியாது!

(D) பலரிடம் பாடம் கேட்கும் போது, "காலம்" விரயமாகும்! ஜன்மா வீணாகும்! ஜனன மரணத்தை வெல்ல முடியாது! இது பிரமாண உண்மை!



உ



Ⓔ இங்கு முக்கியமாக "குருவையே" சந்தேகிக்கும் நிலை, அவசியம் ஏற்படும்!

Ⓕ அல்லது "தன்னையே" தானே சந்தேகிக்கும், "குற்ற" உணர்வு உண்டாகும்!

③ ஒருவார்த்தைக்கு, பலபல அர்த்தம், பிரித்து பிரித்து, பார்க்காதே: Ⓐ இது அதி அதி முக்கியம்!

இங்கு "இறை குரு" உணர்வு ஸ்திரமாக, இருக்க வேண்டும்!

Ⓑ இறை குரு உணர்வு, ஸ்திரமாக இருக்கும் போது, அந்தர்யாமியாகவும், இதயவாசியாகவும் (இறை குரு) இருக்கும் "அவர்" உண்மையே நிலைக்கும்! அனுபவநிலையில், தூய விளைபயனாகத் திகழும்! வடிவடிவமோ! "வாக்கு" நிலையோ! அவசியம் கிடைக்கும். (இது எம் ஸ்வய அனுபவம்)



93

C அப்படி இறை குரு, உணர்வுடன்

வாக்கியத்தில், "உணக்கண"

ஓர் ஸ்வயமாக, அர்த்தத்தின் கருத்து! அவஸ்யம்

"பர" கருணையால் தோற்றும்!

D உன்னிடம் மனம், அழியாமல் இருந்தால்

சந்தேகம் உண்டாகி, அக்கருத்தை மாற்றி அமைக்கும்!

உன்னிடம்
↑ அறிவு ஸ்திரமாக இருந்தால், மாறுபட்ட கருத்து

தோன்றாமல், "ஆனந்தம்" ஒன்றே தோன்றும்.

E முன் சொன்ன நிலையில் மனதில் சந்தேகமும்

பக்குவப்பட்டால், இறை குரு உணர்வுடன், மனம்

"கசந்து" இவ்வாறு பொறுமையை,

அனுஷ்டித்தால், அவஸ்யம் தெளிவு உண்டாகும்!

F எல்லாம் நீயே! என்ற நிலையில், "பொறுமை" யே

இங்கு உறுதியாகும்! இங்கு முதலில் வரும்

எண்ணமே, "பர" கருணை, உறுதி பண்ணு!



இ

டிக்ஷனரி என்ற, (அ) அகராதியின், கருத்துக்கள், கவி தோஷிக்கிறகென, வந்த மாறுபட்ட, வேறுபட்ட, கருத்துக்களை உடையதாகும்; அவை, பக்திக்கோ, ஞானத்திற்கோ, உகந்ததாகாது!

(ஓ) அன்பர்கள் அனைவர்க்கும், ஓர் பணிவான வேண்டுகோள்!!!!

"டிக்ஷனரி" "அகராதி" என்ற, நூலைப்பார்த்து, அர்த்தம் பார்க்க வேண்டாம்.

(H) உனக்குள் உனக்கென தோன்றும் "முதல் உணர்வே" தெளி நிலையாகும்.

அது பற்றி பலரிடமும், ஆலோசனை பெறவேண்டாம்.

(I) உன் ஸத்குரு, நம்பிக்கையானது, உனக்கு "உள்" இருந்தும் உணர்த்தலாம்; அல்லது "வெளியே" இருந்தும், விளக்கம் கொடுக்கலாம்.

சந்தேகம், கலக்கம், பயம், வேண்டாம்.

மேலே கூறிய மூன்று நிலைகளும் வெகு வெகு முக்கியம்.

இங்கு எம் புரிவு சொல்வதாவது இம் மூன்றையும் தாண்டி

"தாம் பிரம்மம் தாமெனவே, நிதித்யாசிப்பாய்!!!

(ஓ) பாடல் 63 / 64!

குற்றம் குறை, பேதம் இல்லாமல், உணர வேண்டிய பொருளை, உணர்ந்த பின்னர், அப்பொருளின் "சாக்ஷாத்காரம்" அதுவே நாம்! நாமே அது! என்ற

95



"பூரணத்வம்" பெற வேண்டுமே

எல்லோரும், திரும்ப திரும்ப, படிக்காதே! அப்படி படிப்பதால், "வாக்குக்கு" துக்கமே யல்லாது, சுபமும் இல்லை! நவமும் இல்லை! ஆனந்தமும் இல்லை! அதாவது "புதரை" நீக்கி, தானியத்தை "மணியை" எடுக்கின்றனர்; "வாதகமாம்" நால்வெல்லாம், தூர எறிந்து விடு, என்கிறார் எம் ஐயா! பேதமற உணர் பொருளை, உணர்ந்த பின்னர்! என்கிறார்!

பொருள்:- ஞான பாடத்தின் அடிப்படை

அனுபவமே:- குற்றம் குறை நீக்குதல்! பேதம் காணாமை! விருப்பு வெறுப்பு கொள்ளாமையாம்! மேலே கூறிய இம் மூன்றும், தோன்றுவது. நான்! என்றல்! என்னுடையது! என்ற அஹங்கார மமகாரம் ஆம்! இவைகளை, நீக்குவது எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உன்னுடையதே! என்ற சர்வ சங்க பரித்தியாகமாகிய, "சிவார்ப்பணம்"! ஆம். என அனுபவ ஸ்ரீமஹான்களின், வாக்கியம் இருக்கின்றது!



உ

மேலே கூறிய வைகளை, வரிசைக் கிரமமாக, ஓர் சாதகனானவன் "அதி சிரத்தையாக" செய்து கொண்டு, பின் ஸத்குரு அருளால், ஆத்ம ஞானனுபவத்தை, சிரவண, மனனம், செய்வானெயின், அவனுக்கு நிதித்தியாசம் என்ற, "ஸ்வய அனுபவம்" இயல்பாகவே சாத்தியமாகும்! மேலே கூறிய வைகளை, கடைப்பிடிக்காமல், வேத வேதாந்த சாஸ்திரங்களை மட்டும் சிரவணம்! மனனம்! செய்வானெயின், அனைத்தும், "வாய்ஞானமாக" இருக்குமே யன்றி, அனுபவ ஞானம் ஆகாது.

மேலே கூறிய வைகளை, சிரத்தையுடன் செய்பவனுக்கு மட்டுமே, ஆத்ம சாக்ஷாத்காரம், சாத்தியமாகும். ஆத்ம சாக்ஷாத்காரம் பெற்றவனுக்கு:- குற்றம் குறை, விருப்பு வெறுப்பு, பேதா பேதம், இம் மூன்றும், அவசியம் தோன்றாது. அப்படி தோன்றாத நிலையில், சிரவண, மனனம், என்னும் "நித்திய பாராயணம்" தேவை இல்லை என்கிறார் ஸ்ரீ குருதேவர்.



உ

(97)

அனுபவமாகும்
அம் ஓன் ஸ்ம்பரியந்தம். சிரவண,
மனனம் என்னும். நித்திய பாராயணம்,
"அவஸ்யம் தேவை" படிக்காதே
ஆகவே பூராணத்வம் பெற்ற பின், படிக்காதே
என்கிறார். அப்புறம் உன்னால் படிக்க முடியாது!
அப்புறம் உன்னால் படிக்க இயலாது!. இது இந்த
நிலையின், அனுபவம் ஆகும். ஆனால் நீங்கள் தானே,
அதி சிரத்தையுடன்! படிக்கிறீர்களே,
என கேட்கலாம்?
"எங்கள் நிலை" வேறு, "உங்கள் நிலை" வேறு,
உங்களுக்காகவே, யாம் பாராயணம் செய்கிறோம்.
மேலும் ஓர், முக்கியம் என்னவென்றால்?
பதரை நீக்கி, மணியை எடுத்து பின்னர்!!!
"பதகமானதில்" தூர எறிந்து
விடு என்கிறார்!
பதர்:- நான், என்னால், என்னுடையது, என்ற அகங்
காரமமகாரம் முதல் அதனைத் தொடர்ந்து, குரோதம்
ஞை, பேதம், விருப்பு வெறுப்பும். இவைகளின்
ஒட்டு மொத்தம் நான் ஆண். அல்லது நான் பெண்.
என்றும், நான் ஒரு குடும்பி என்ற "ஜீவன்"
என்ற அறியாமையின், தேவனக்குறைவின் பதர்களும்



உ

மேலே சொன்னபடி திரை நீக்கிவிட்டால்,
இருப்பது மணி என்ற "ஆத்மாவே"
மேலும் சுற்ற உணர்வு, தேகம் நீங்கி, ஆத்ம சாக்ஷாத்
காரம், பெறும் வரை, அவஸ்யம், நித்திய பாராயணம்;
செய்ய வேண்டும்! காரணம்? இது "கலிதோஷ
காலமாக இருப்பதால், செய்தே ஆக வேண்டும். அதனால்,
வாதகமாம் நாம் தாக்கி வரை என்றார்!:—
வேத வேதாந்த "அத்வைத" நாம் பலபார்!
அவஸ்யம், உன் "மனத்தெளிவின்"
படியும்! உன் பூர்வ புண்ணியத்தின் படியும்!
உன் இறை குரு, கிருபையால், ஓர் நாள்!
உன்றால் அனுபவிக்க முடியும், என்ற நம்பிக்கையில்,
ஏற்புடையதாகும்! அந்த ஓர் நாள், "அனுபவ்
நாலாகவும்! மற்றும் ஒன்றிரண்டு "அறுசுவ"
நாலாகவும்!! சிவகாவம் தோற்றும்! அனுபவம்
காணும்போது, அனுபவநால் கிரந்தம், தள்ளி விடு!



# உ

99

மேலும் மேலும், அனுகூல நூல்களை,
ஆராய்ந்தாலோ! பாராயணம் செய்தாலோ!

# "ஸ்வய ஞானுபவம்!"

கூடாது என்பதே சத்தியம். ஆகவேதான், எம்பிரு சொல்கிறார்! **பாதகமாம்** நூல்களை தள்ளு என்றும், தூர எறி என்றும், அழுத்தமாக சொல்கிறார்.


வேத வேதாந்த, அனுபவ ஸ்ரீமஹான்கள், சொல்வதாவது: ஒன்றைப் பற்றி, ஓரகத்திரு என்றும்; கூர்ந்த திருஷ்டி வேண்டுமென்றும்; பலமரம் கண்ட தச்சன், ஒரு மரத்தில் நில்லான் என்றும்; பலபல இடத்தில், கிணறு தோண்டியவன், தாக சாந்தி, செய்யான் என்றும்; உண்டவனே உறங்குவான்! பேசுபவன் உண்ணவும் முடியாது. உறங்கவும் முடியாது என்றும்; காலாதீத அதுவே, ஒன்றே தவிர, இரண்டில்லை என்றும்; அனுபவம் இருப்பதால், முன்பு அனுகூலமாயிருந்த, அந்த நூல்களையும், தூர எறிந்து விடுவென்றார் எம்பிரு.



உ ஆனைப் அனுபவம் கொடுக்கும், நாலு மட்டும்! மனம் அழிந்து "அது" ஆகும்வரை, தொடர்ந்து, பாராயணம் செய்! என்று இன்னொரு பாடலில் சொல்லும்போது:- தூங்குபவன் கையில், உள்ள மலரானது, எப்படி ஸ்வயமாக! அதாவது தானாக; அதாவது இயல்பாக; அதாவது "உணர்வின்றி" தானே, கைநழுவி போவதுபோல், நாமரூப ஜகம் தானே உண்மையை விட்டு நீங்கி விடும் என்றார்.

அதே நிலையில், உடல் உலக ஜகநிலையை, முன் கூறிய சர்வார்ப்பண நிலையில் தள்ளியும். அகம்பிரம்மம்! ஜகம் பிரம்மம்! அகமேஎல்லாம்! என்ற பிரம்மான்ம பாவனையின்; "பாராயணம்" செய்து வரும்போது, இந்த நாமரூப ஜகம், உண்மையைவிட்டு, தானே நீங்கி விடும். இதுவே பிரமாண உண்மையாயும்; அனுபவ உண்மையாயும்; முன் மூன்று யுக, ஸ்ரீமஹான்களின், அனுபவ உண்மையாயும். இந்த ஜைவ பரதேசியின் "ஸ்வய அனுபவமாகவும் இருக்கிறது.

——×——×——×——×——×——×——



பாடல் 66.

# உ3 இருக்கிறது என்றும்;

அதுவே இயங்குகின்றது என்ற நிலையில் "அசைகிறது"

என்றும்; அப்படி அசைந்த நிலையில், மனோ நிலையில் இன்பம்

என்றும்; அறிவு நிலையில் "ஆனந்தம்" அடைகிறது.

என்றும் ஸ்ரீ மஹான்கள் சொல்லும்போது. அதையே

"சத்" என்றும்; "சித்" என்றும்; "ஆனந்தம்"

என்றும் சொல்லுவார்கள்.

இன்பம்:- மனோநிலையில் பெறும் ஓர் நுகர்ச்சியாகும்.
இம்மனோநிலை இன்பமே, துன்பமாய் மாறும்! துன்பமே
இன்பமாய் மாறும். ஆகவே இன்பமும் துன்பமும் ஒன்றே!

உடலில் உள்ள படையை, சொறியும் நிலையில் இன்பம்!
" " " சொறிந்து பெறுவது துன்பம்!!
ஆகவே இரண்டும் ஒன்றே!

ஆனந்தம்:- பசுத்தன்மை என்ற பாசத்தில் விளைவது, இன்ப துன்பம் என்ற ஜனன மரணம் ஆகும்! பசுத்தன்மை என்றால் ஜீவத்தன்மையாகும்! இச் ஜீவத்தன்மை இறந்தால்,

அதாவது "ஆ" என்பது, பசு என்ற பாசமாகும். அப்பசுவின் அந்தமாகிய முடிவிடமே, ஆ + அந்தம் = ஆனந்தம்!
ஆகவே, இது ஜீவன் முக்திக்கு உரியதாக இருப்பதால்,
ஆனந்தம் சிரேஷ்டமாக கருதப்படுகிறது!
இன்பம் பிரியமானதாக கருதப்படுகிறது!!
ஆகவே இன்பம் = துன்பம்! நன்மை = தீமை! சுகம் = துக்கம்! லாபம் = நஷ்டம்! வேண்டும் = வேண்டாம்! புண்ணியம் = பாபம்! ஜனனம் = மரணம்! என அனைத்திலும்,
இரண்டு உண்டு!



உ

ஆதல் ஆனந்தத்திற்கு, எதிர்மறை
இல்லவே இல்லை. இந்த ஆனந்தம், இரு
வகைப்படும். ஒன்று பக்தி நிலையில்,
"பேரானந்தம்"! அதாவது, பெயரளவில் கிடைக்கும். அதாவது ஸ்ரீபகவன் நாம விழிமட்டுமே கிடைக்கும்
ஆனந்தம், பேரானந்தம் என்று சொல்லப்படும்!
மற்றொன்று ஞானநிலையில் அதாவது ஆன்ம நிலையில்
அதாவது பரமாத்ம நிலையில் அதாவது பிரம்மானந்த
நிலையில், பெறுவது "பிரம்மானந்தம்"!
என்றும், அனுபவ ஸ்ரீமஹான்கள் கூறுவர்!
இப்பாடலில் :- இருக்கின்றது! விளங்குகின்றது!
இன்பம் (ஆனந்தம்) தோற்றுகின்றது. இவை மூன்றும்,
"நாமரூபம்" ஆகும். அதாவது நாமரூப சம்பந்தமாகும்.
ஆனந்தம் தோற்றுவது,
அதாவது இருப்பது, அசைவது, மனக்கண்களுக்கு தோற்றுவது நாமரூபம் ஆகும்.
இவைகளால் ஏற்படுகிறோம் இவ்வைந்தில்,
என ஐந்தை "பரசரூபம்" என்றும்,
முன் கூறிய, மூன்றும் "ஜக"
பின் கூறிய இரண்டும் "(தியங்கிய)"
குறைவிட்டு விட்டு, தயங்கிய
இயங்கிய என்றும், இயக்கத்திற்கு ஆதாரம் என்றும்.
"பரம்பொருளை" உயர்த்திவிட்டு.



உ

ஓர்முக்கியம்! (103)

இயங்குவது பரம் என்றமன்!
இயங்க வைப்பது;
மாயா வின்மனம்!
மனதின் மயக்கம் இன்பமும் துன்பமும்!
அறிவின் சொரூபம் ஆனந்தம்!

"சுருக்கமுறும்" என்பதும், "சொல்பொருள்" என வாக்கிய விளக்கமே யன்றி உண்மை யல்ல வென்றும் அழுத்தம் திருத்தமாக சொல்லி, விளக்கம் கொடுத்து விட்டு சுருங்கிய சொல் பொருள், இரண்டையும் தள்ளு, (நெருங்கிய) என்றும், "நெருக்கமுறும்" ஸத் ஸித் ஆனந்தமாய் உள்ள, ஒன்றே "நாம்" என நிச்சயிப்பாய் என அப்பாடல் முடிகிறது (சுருக்கமாகவும்)

பொருள்: (A) சுருக்கமும் / சொல் விளக்கமாயும், உண்மை யல்லாததுமான "நாமரூபஜட படாதிகள்" (மண், மலை, ஜீவ சரீரங்கள், மரம், செடி கொடி புல் பூண்டு முதலியவை) (நெருக்கமாகவும்) ↑ உருசி நாட்ட இடம் இல்லா (B) நெருக்க முறும் என்றால் நீக்கமற, நிறைந்து நின்றதாயும், மலி, எங்கும் அதில் உன்னையும் இணைத்து பிணைத்ததுமானது/ எனப் பொருள்

இனி ஸத். ஸித். ஆனந்தத்தின் விளக்கம்:

(1) "ஸத்: — முன் மடலில் கூறியபடி, பிரம்மப் பிரபஞ்ச ரகஸ்யத்தின்படி, அத்காரவாக்கத ஒன்றை பரசொரூபமானது, நாம, ரூப, குணம், குறி, காலம்,



இ

தேசம், வர்த்தமானம், மனம், வாக்கு, காயம், ஆகிய இந்த ஐந்தினையும், விளக்கவோ, சொல்லவோ, துவக்கவோ, முடியாத ஒன்று என்றால்? அதை எப்படி ஏற்பது? எப்படி நம்புவது? எப்படி சொல்வது? எப்படி விளக்குவது? ஆகவே? விளக்கத்திற்காத மட்டும், இது "உதாரணமே" தவிர உண்மையல்ல! (மெய்க்கு பொய்யான கதை)

"அதுவே" தன்னிற்தானே வெளிப்படுத்தும் நிமித்தம், தமக்கு தோற்றமில் வாத்தன்மையாலும். தமக்கு தமக்கு இயக்கமில் வாத்தன்மையாலும். அன்னியம், எவையுமில் வாத்தன்மையாலும். "தாமே" சர்வ சகாவும் தாமாகிய சிவமாக இருக்கும் நிமித்தம் "சதாசிவமாகவும்"! அண்டரண்ட பிரம்மாண்டங்களை சிருஷ்டிப்பண்ணும் நிமித்தமாக "மஹேசனாகவும்"!! அரி அரி அரி "சூட்சுமமாக" தோற்றிக் கொண்டது! அவ்விரண்டு, சூட்சும சொரூபங்களின் "நிறைவே" "யோகமாயா" என தனக்குத்தானே, ஆக்கிக் கொண்டது என ஸ்ரீமஹான்கள் சொல்வார்!



(105)

மண் என்ற பரம் என்றே,
பரம் என்ற மண் என்றே,
குறிப்பிடுவது, உவமான நிமித்தம்
மண்ணும் பசையாகிய ஜலமும்,
இணைந்து பிசைந்த களிமண்
ஒன்றாக வேண்டும். இது உவமானமே!
அப்படியாகத்தான் பல தோற்ற நாமரூபம் பெற முடியும்.

இப்போது நாமரூபமற்ற, அந்த ஒன்றே ஓர் **"தோற்றம்"** உண்டாகும் நிமித்தம். **"தாமும்"** நம்முடைய **"யோகமாயாவும்"** ஒன்றாக இணைந்து, பிணைந்த நிலையில் **"மண்"** என்ற **"பரம்"** என ஆனது! இந்த மண் என்ற பரமே, **"ஸத்"** என ஸ்ரீ மஹான்கள் அழைத்தார்கள்! (யோகமாயா என்றால் ஆதாரமாகும்! பசையாகிய ஜலம்)

**ஓ "ஸித்":-** அந்த ஸத்தாகிய பரமே, விளையாடவும், இயங்கவும், ஓர் தோற்றம் எடுத்தது! அந்த ஸத்தே **"ஸத்பரம்"** என ஆகி, அண்டரண்ட பிரம்மாண்ட, மண் மலை மற்றும் தாவர வர்க்கங்களுக்கும் **"பஞ்ச பூதங்களை"** கொடுத்து அசைவின் நிமித்தம் **"சித்தத்தில்"** நிலையை, தமக்குத்தானே, எடுத்துக் கொண்டு, வசீகரம், கவர்ச்சி, அழகு, இவைகளை, உண்டுபண்ணி **"ஸத்தை ஜகத்தாக்கி"** கொண்டதென, ஸ்ரீ மஹான்கள் கூறுவர்! இதையே, **"ஸித்"** என சொல்வர்!



பண்டம் = அரிசி உணவு.
பாண்டம் = ஜீவ சரீரங்கள்.
பதார்த்தம் = நவதானிய உணவுகள்.
பத அர்த்தம் = பதமுக்தி. இவை அனைத்துமே அதின் பிரவர்த்தி!
எல்லாமே பரம் என்ற மண்ணுக்கு அன்னியமில்லை.

இந்த ஸித்தின் விளையாட்டின் நிமித்தம், ஸத்சொரூபமான சதாசிவ ஸ்ரீ மஹேசனும் "ஹயன் / ஹரி / ஹரன் /" என, அதி சூட்சுமமான தோற்றம், நமக்கும் நாமே தோன்றிக்கொண்டு தம்முடைய நிழல் ஆகிய, "யோகமாயாவை" உண்டு பண்ணி, அதன் நிழலில், இயக்க விளையாட்டை ஆரம்பிக்கிறார். இங்கு இவர்கள், விளையாடும் நிமித்தம் பண்டம் / பாண்டம் / பதார்த்தம் / பத அர்த்தம் / ஆகிய அனுபவ இவைகளை நிமித்தமாக பர அம்சமே / ஆத்மா என ஆகி, தம் விளையாட்டின் நிமித்தம் யோகமாயாவின் அம்ச "மகனை மாயா மனை" சொரூபமான, "விஷ்ணுமாயாவை" வைத்து, தன்னை, மனதால் பந்தப்பட்ட ஓர் ஜீவாத்மாவாக இருந்து விளையாடுகிறது. ஸத் பரசொரூப, அம்சமான சித்தத்தின் (மனதின்) விளையாட்டே, "ஜகஜீவ விளையாட்டாக" நடைபெற்று வருகிறது. இதுவே "ஸித்தன்" விளக்கமாகும். ஸித் சொரூப



உ

3. "ஆனந்தம்" :– இங்கு மனம் செயல்படும் போது இன்பமும், அதன் அடுத்த அம்சம் துன்பமும், தோன்றுமாத்திரமாக, தோன்றிமறைகிறது. இது தோற்றமாத்திரமேயன்றி, "உண்மை" அல்ல என்பதே ஸத்தியம்! இங்கு, அறிவு செயல்படும் போது, ஆனந்தம் ஒன்றே தோன்றும்! நான், என்னால், என்னுடையது, என விளையாடினால், இது மன விளையாட்டாகும். அங்கு இன்பமும், துன்பமும் அவசியம் தோன்றும்! எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உன்னுடையதே என விளையாடினால், அங்கு குற்றம் குறை, பேதாபேதம், விருப்பு வெறுப்பு, தோன்றாத தன்மையினால், அங்கு ஆனந்தம் ஒன்றே தோன்றும்! இது அறிவின் விளையாட்டாகும்.

"ஸித்"தே (பிரம்மமே) சித்தமாகிய (மனமாகிய) தன்மையினால், மனோமய கற்பனையானது, இக்கவி தோஷ, கோரகுணங் கனவைத்து, "காரசாரமாக" விளையாடிக் கொண்டிருக்கிறது. முன் கூறிய மனதின், விளையாட்டாக இராமல், அறிவின் செயல்பாடாக இருந்தால், வினையும் முடியும்! ஜனனமரணமும் நாசமாகும்! முதலில் பேரானந்தம் தோன்றும், பின் பிரம்மானந்தமாக முடிவுறும்!

உ



இப்பாடலின் முக்கியம், என்னவென்றால்? இருக்கிறது! இலங்குகிறது! இன்பமாகிறது, ஆகிய மூன்றுமே "ஸத், ஸித், ஆனந்தம்" என ஆகிறது!

"நாமரூபம்" இரண்டும், ஜகஜீவ சொரூபமாகிய, ஜனனமரண தோஷமாகும்! ஆகவேதான் ஸ்ரீரிபு சொன்னார் நாமரூபம் இரண்டையும், மூலத்தோடு களைந்து எறிந்தும் ஸத், ஸித், ஆனந்தம்! இம்மூன்றையும் "அறிவு" பூர்வமாக, ஏற்றுக் கொண்டு, அம்மூன்றும் "நாமே" என்றும், நாம் அம்மூன்றுக்கும் அன்னியமில்லை என்றும், ஆனந்தத்துடன், ஒன்றி, கலந்து, கரைந்து, மெய்மறவாயாக.

—×—×—×—×—×—×—×—×—

94 பாடல் 68.

"அகண்டமான" பரப்பிரம்மமானது, அறிவும்! பேரறிவும்! உடைய, பக்குவ ஆன்மாவுக்கு, "பரசொரூபமாக" தோற்றும், பக்குவம் இல்லாத, அவிவேகிக்கு "நாமரூப, ஜக, ஜீவ" சொரூபமாகவே தோற்றும்.



உ

பொருள்:- எங்குமாய்! ஏகமாய்! எல்லாமாய்! எதிலுமாய்! நானும் அனைத்துமாய்! உறவு சுற்றமா நட்புமாய்! மாதா பிதாவாய்! கணவன் மனைவியாய்! தொழிலுமாய்! அதன் பணமுமாய்! நவமணிகளாய்! கவர்ச்சி மிக்க பொருள்களாய்! மற்றும் உலக நிலையில், "**வேண்டியதாயும்! வேண்டாதவைகளாயும்!** "**எல்லாமே! பர**" அம்ப சொரூபமான, "**மண்ணே**" என்றும், அம்மண் தோற்றமான "**பரமே**" என்றும், உணர வேண்டும்! அந்த ஒன்றே, ஸத்தியம் என்றும் பிரம்மம் ஸத்தியம்! ஜகத் மித்தை! என்ற, தெளிந்த அறிவு உடையவர்களுக்கும், நாமரூப ஜக ஜீவ உறவு சுற்றம், பணம், என "**மயக்கம்**" இல்லாதவர்களுக்கும், "**பரப்பிரம்மஸ்**வய அனுபவம், உடையவர்களுக்கும், எல்லாமே "**பரசொரூபமாகவே**" தோற்றம். அவனே, ஜீவன் முக்தன் என்ற திடநம்பி!



உ

நாம ரூப உலகமே, ஸத்தியம் என்றும்; உறவு சுற்றம், நட்பே, நம் வாழ்க்கை என்றும்;

பொன் மயக்க போதையிலும், பெண் இன்ப போதையிலும்,

கண்டதே காட்சி! உண்டதே சுகம்! கொண்டதே கோலம்! என "அங்காடி நாய்" (தெருநாய் போல்) போல் அலையும் அவிவேகிகளுக்கு மட்டும்; பரமாகத் தோற்றுமவிடு; நாம என

ரூப, ஜகத் ஜீவ, தொழில் குடும்பம், பணம் "மயக்க" சொரூபமாகத் தோற்றும்!

## கல்லில் நாய்!

ஓர் வீட்டின், மெயின் கேட்டில், நாய் ஜாக்கிரதை என்ற ஓர் போர்டு இருந்தது. வாசலில் ஓர் பெரிய நாய், சங்கிலியில் பிணைக்கப்பட்ட நிலையில், நாவை நீளமாகத் தொங்கப் போட்டவண்ணம், வாசலை நோக்கியபடி பார்த்த வண்ணம், படுத்திருந்தது! வெளியில் இருப்பவன், எவனையும் உள்ளே போகப் பயப்படுவான். ஓர் நாள், அப்படி பயந்த ஒருவன், அவ்வீட்டு எஜமானின், பழக்கமானவனாக இருந்தான். அவனை அந்த எஜமான், உள்ளே அழைக்கார். அவன் பயந்து பயந்து, உள்ளே சென்றான். அந்த எஜமான், அந்த நாயின், தலையில் கை வைத்த வண்ணம், பேசிக் கொண்டிருந்தார். அவர் பக்கத்தில், சென்று பேசிய அவனுக்கு, அப்போது தான், அது ஓர் "கல் நாய்!" எனத் தெரிந்தது!



111

சென்ற "விடைவரை"
அது
நிஜ நாயாக தோன்றியது, இப்போது கல் நாயாக
தோன்றியதால், சந்தேகவக்க "பயம்" ஒழிந்தது.
அடுத்து எந்த நேரம், அதைக்கண்டாலும், நாய் தான்
தோன்றுமா? பயம் தான் தோன்றுமா? அவன் எத்தனை
"முயற்சி" செய்தாலும் நாய் தோன்றுமா? சென்ற
விடைவரை, நாயாக தோன்றி ஒன்று இப்படி கல் நாயாக,
மாறக்காரணம் என்ன? அது கல் நாயின் குற்றமா?
நாயாக பார்த்த "மனதின்" குற்றமா?
அதை கவனிக்கவும்! ~~இதுமனதின்~~ குற்றமே!
"கல்" என்றுமே "கல்தான்"! தன் சுய தேவை
க்காக "நாய்" என்ற நாமரூபத்தை மனதால்
மனிதன்
கொடுத்து, கரத்தால் வடித்தான்! அது நாய்தான் என்ற,
அசைக்க முடியாத நம்பிக்கையே "நாய் ஆனது"
அதே அசைக்க முடியாத நம்பிக்கையை, மாற்றி
அது கல்தான் என உறுதி கொண்டான்,



காட்சி அல்ல உணர்வே! (112)

ஜலத்தில் கலந்திருக்கும் உப்பையும்! சர்க்கரையையும்!
எப்படி கண்களால் காண முடியாதோ
எப்படி நாட்டு சுவைத்து உணர முடியுமோ,
அப்படி அறிவின் உணர்வால் உணர முடியும்!

அந்த விநாடியே, அது கல் ஆகிவிடும்!

அங்கு அவ்வீட்டு, எஜமான் சொல்வது போல், இங்கு உன் "ஸத்குருவின் ஸத்திய வாக்கில்" உறுதியான நம்பிக்கை இருந்தால், உங்கள் மன உறுதியினால், நாய் எப்படி அதன் யதார்த்த, சொரூபமாகிய கல் ஆனது போல். நாமரூப ஜகஜீவ சொரூபம் அனைத்தும் "பரம்" (என்ற) ஆகிய "மன்னனே" என ஆகிவிடும் இது ஸத்தியம்!

இங்கு காட்சியல்ல உணர்வே முக்கியம்.

கல்லில், நாய் வந்ததும் இல்லை! போனதும் இல்லை!

அதே போல் "பரமாகிய, மன்னனில்" நாமரூப, ஜக ஜீவ, உறவு அனைத்தும் நட்பு பொன்பொருள் வந்ததும் இல்லை! அது போனதும் இல்லை! ஆனால் தோன்றியதே என்றால் அது உன் "மனமய பிராந்தி மயக்க" போதையாகும்!

—x—x—x—x—x—x—x—



உ

பாடல் 70.

# 25 நாம் ஆத்மாவே என்ற;

தம் சொரூப நிலை, பெற்றவர்களுக்கு "பவபந்தம்" தொடராது என்பதே சத்தியம்!

தன் சொரூப நிலை பெறாதவர்களுக்கு வேறு எந்த "சாதனையோ" (வழிமுறையோ!) செய்தாலும், பவபந்தமும் தொலையாது! பிறவி நோயும் தீராது!!

மேலே கூறிய "சலனமில்லா" (சஞ்சலமில்லாத) பாவனை, செய்பவர்களுக்கே, அஞ்ஞானம் என்ற, அதாவது அறியாமை என்ற, அதாவது நம் கவனக்குறைவான, நாமரூப "ஆவரண" மயக்கமும், அவ்வாவரண மயக்கத்தினால் தொடரும், குற்ற உணர்வு, பேதாதிபேதம், விருப்பு வெறுப்பு, ஆகிய "விக்ஷேப" கலக்கம் தொலையாது என்பதே சத்தியம்!

பவபந்தம்:— நான் சம்சாரி! நான் குடும்பி! என் மனைவி! என் கணவன்! என் குழந்தை! என் பொருள்! என்னால்தான் முடிந்தது! என்னால்தான் முடியும்! என்ற அஹங்கார மமகாரத்தால், நாமே வலிய ஏற்றுக் கொண்ட பாசப் பிணைப்பும்! அதன் இணைப்பும்! அதன் ஜனன மரணமும் ஆகும் இதுவே பவபந்தம்.



உ

பொருள்:- நாம் ஆத்மாவே என்ற, அகம் பிரம்மம்! ஜெகம் பிரம்மம்! அகமே எல்லாம்! என்ற "பிரம்மாண்ட" பாவனை செய்து, "அது" ஆகாத நிலையில், "வேறு" எந்த சாதனைகள் செய்தாலும் (15 கலைகளையும்) கற்றாலும், போதித்தாலும், அனுபவித்தாலும் இங்கு கூறிய, பவபந்தம் நாசம் ஆகாது! காரணம்?

நாம ரூப, ஜகத் ஜீவ, அனைத்துமே "மாயை பிரவர்த்தியாக" இருப்பதால், அதாவது புண்ணிய பாப கர்மாவின் இயக்கமாக இருப்பதால், தேவையும் ஆசையும்! ஆசையும் கர்மாவும்! கர்மாவும் பிறப்பிறப்பும்! தொடர்ந்து பின்னிப் பிணைவதால், மேலே கூறிய, "பவநோயை" தீர்க்க முடியாது! என்பதே ஸத்தியமாகும்! இந்த மாயை பிரவர்த்தி எப்படி பின்னிப் பிணைகிறது என்றால்? ஆவரண மயக்கமும்! விட்சேப கலக்கமும்! என அனுபவஞானிகள், சொல்கிறார்கள்.

115



உ

A

ஆவரணமயக்கமும் ஓவிட்சேப கலக்கமும் அற்றிய, ஓர் சிறிய விளக்கம்:—

ஜடகட படாதிகளும் (அனைத்து கோள்களும்) சூரிய சந்திராதிகளும், மண், மலைகளும், அனைத்து ஜீவ கோடிகளின் சரீராதிகளும், அனைத்து மரம், செடி, கொடி, புல், பூண்டுகளாகிய, தாவர வர்க்கங்களும் ஆகிய எல்லா நாமரூபங்களும், அகாலாதீதமான "பர" சொரூப "மண்ணுக்கு" அன்னியமில்லை! என்பதே ஸத்தியம்! எல்லாமே

பஞ்சபூத பிணைப்பும் இணைப்பும் ஆகும் என்றுமே.

"பஞ்ச வர்ணங்களால்" அழகாகவும், வசீகரமாகவும், கவர்ச்சிகரமாகவும், "அலங்கரிக்கப்பட்டிருக்கி"ன்றன!

நாமரூபங்களான, இவை பரமாகிய மண்ணின் மறு தோற்றமாகிய "பொன்" ஆகும்!

இப்பொன்னே, இந்த பர சொரூப பூரண அம்சமான, "ஆத்மாவே" நம் கவனக்குறைவு என சொல்லி தாம் ஓர் ஜீவாத்மாவென சொல்லிக் கொண்டு.

(ஜீவாத்மா என வேஷம் போட்டது மனமாகும்)

(116)



நாம் "மாயாமனதால்" பற்றப் பட்டதுபோல், நடித்துக் கொண்டு, முன்பு கூறிய பொன்னே, நம்மை மறைய கற்பனை யால், பற்பல விதவிதமான, ரகரகமான, "தம்" தேவைக்கும் ஆசைக்கும்! ஆசைக்கும், தேவைக்கும்! சுவைக்கும்; அனுபவக்கிறோம்! அனுபவக்கிறோம், சுவைக்கும்! ஏற்றவாறு "பாத்திர/பண்ட/பதார்த்தங்களாகவும்/" அனைத்து "மோஹ.போஹ" வஸ்துக்களை, உண்டு பண்ணியே "ஆபரண/" தோற்றம் ஆகும்! ஆனால் இவை அனைத்தும் "பர" சொரூபமான "மண்ணே" ஆகும்.

**B** இப்படியாக, ஆபரணங்களை நம்மைறவன்மையால் தோற்றுவித்த, இந்த மனம் படைத்த மனிதனானவன் (ஜீவாத்மாவானவன்) "ஆசை & தேவை/" என்ற, இரு வகையிலும் பின்னலுண்டான்! அந்த பின்னவானது மோஹத்தையும்/ போஹத்தையும்! (மோஹம் = ஆசை! போஹம் = அனுபவம்) உண்டுபண்ணியது!



பட்டுப்பூச்சி:– தன்னுடைய பசை (பாச) வலையால் தன்னை என்றும், என்னுடையதை! விடத்தன்மையால், தன்னைத் தானே பிணைத்துக்கொள்ளும். (117)
தனக்குத் தானே, ஜனனமரணத்தை உண்டுபண்ணிக் கொள்வது, பட்டுப்பூச்சியாமே!

அம்மோஹ போஹ பவனது, **கடும் கொடும்** கோடி கலியுக குணங்களாகி

"**நான், என்னுடையது**" என அஹங்கார, அதிகார, ஆதிக்க, அபிமான, உடைமை, உரிமை, மானவமானம், ரோஷம், வெட்கம், சூடு, சுரணை, வட்டணை! இவைகளால், பின்னிப் பிணைந்து "**கடும் சிக்கலுக்குள்**" சிக்கிக்கொண்டான். சிக்கிக்கொண்டது மனம். இவனி ஆத்ம சொரூபமே! இதுவுந்தியும் இப்படிக்கடும், சிக்கலுக்குள் ஆனானவன்! இச்சிக்கலின் காரணமாக, நாம் எல்லோரும் ஒருவனே! என்னும் "**ஒன்றே**" என உணரமுடியாமல், பற்பல வடிவ தோற்றமாக எண்ணி, எண்ணி! அதையே பேசிப் பேசி! ஒன்றுடன் ஒன்று, சொந்தம் என்றும், அச்சொந்தத்தால், பந்தம் என்றும், அப்பந்தத்தால் பாசம் என்றும், அப்பாசத்தால் "**வினையின் பற்று**"! என்றும் ஓர் பட்டுப்பூச்சியானது! எப்படி தன்னுள் தோன்றும், பட்டு நூலால், தன்னைத் தானே பிணைத்து தன் பிணைப்பால், தான் மரணம் அடைவது போல். இந்த "**மனதேறும்**" இன்னணம் எழுதுகிறேன்!



சிலந்திப்பூச்சி:- இப்பூச்சியானது தன்னுள் தோன்றும் பசைநூலால் கூடுகட்டி அச் சிலந்தி வலையில் அகப்படும் கொசுக்களை உண்டு பசியாறிக் கொண்டு. அப்பசை நூலைத் தானே தனக்குள் ஈர்த்துக் கொள்ளும். எல்லாம் நீயே, எல்லாம் உன்றன்! எல்லாம் உனதென்ற சர்வார்ப்பணமே அப்பசை நூலை இல்லாமல் பண்ணும் நீ ஐயா மெய்! இச்சிலந்தி ஆச்சியாமெய்! (118)

இதனை உணர்த்தும் பருவது:-

மேலே கூறிய, ஆவரண மயக்கத்தால் "ஏனக்கு உனக்கு" என, போட்டி போட்டுக் கொண்டு அந்த வக்ர குணங்களால், உண்டாவதே "விட்சேப" கலக்கம் ஆகும்.

விட்சேபம் என்றால்:- சந்தேக குற்ற கவத்த பயம் ஆகும்.

இப்படி கூறிய, இந்த பவ துக்கமாகிய | ஸம்ஸார துக்கமாகிய | "மரண" பயமாகிய, "பவநோயை" தீர்ப்பது, அகம் பிரம்மம்! ஜகம் பிரம்மம்! அகமே எல்லாம்! என்ற "பிரம்மான்மபாவனை" ஒன்றே.

26 பாடல்கள் 73, 74, 75, 76, 77.

(A) "சித்தமே" பிரபஞ்சம்! சம்ஸாரம்! என்றும் தோற்றுகிறது.

(B) சித்தத்தை சோதித்தால், "ஸித்பர" "ஸித்" சொரூபம் ஆகிறது! இந்த ஸித்பரமே "மனதாய்" தோன்றுகிறது.

(C) அம்மனமே, "நாமரூப ஜகஜீவ" சரீரங்களாக வடிவெடுக்கிறது. ஸித்பரம் யாமே!



சித்பரம்:— மனமோ! புத்தியோ! சித்தமோ! சித்பரத்தின் மறு வடிவம்! இத்தம் ஆனபோதும் அசையவோ! அசைக்கவோ! முடியும்! சித்பரம் யாமே! (119)

(D) மனமோ! புத்தியோ! சித்தமோ! ஸங்கல்பம் என்ற, "கற்பனை" "எண்ணம்" வடிவமாகும்! அந்த அஹங்காரம் யாவும் நிமித்தம் தோற்றியதே!

(E) "எம்" மனமே, எண்ண வடிவமானது! "எம்" எண்ணம், "எம்மிடம்" தோன்றி! விளையாடி! அடங்கி விட்டது! சித்பரம்! சின்மயம்! சித் சொரூபம்! சிதாகாயம் இவை எல்லாம் ஒன்றே! அதுயாமே!

(F) "எம்" மனோ ஸங்கல்பத்தினால், ஜகத் ஜீவ தோற்றங்களும்! ஈஸ்வராதிகளின் தோற்றமும்! "எம்முன்னாலேயே" தோன்றியது!

(G) "நனவு"! "கனவு"! "சுழுப்தி"! ஆகிய மூன்றும், எம் முன்னே (எம்முன்னே)யும் நடைபெறுகிறது! இம்

(H) "யாம்" சுத்த சிவமே! யாம் சிவமே! யாம் சிவமே! என பாவித்து பாவித்தும்! சிந்தித்து சிந்தித்தும்! "சிவம் நாம்! நாமே சிவம்!" என ஆகுவாயாக!

பொருள்:— (A) மனம், புத்தி, சித்தம், ஆகிய இம்மூன்றும், ஒன்றே! மனம் என்றால், எண்ணம்! புத்தி என்றால் அவ்வெண்ணத்தை ("விசாரிக்கு" உற்ற வாறு பிரிவு பாக எண்ணுவது! சித்தம் என்றால், புத்தியின் எண்ணங்களை, "அழுத்து" படுத்தும் அதை "உறுதி" பண்ணுவது! ஆகவே இந்த "நித்" எனச் சொல்லும்.



# ஸத்பரமாத்மா

முன்னூறிய மூன்றின் நிலையிலும், இயங்கினால்தான் இயக்க விளையாட்டு நடைபெறும் எனக் கூறி, மனம், புத்தி, சித்தம், ஆனதென விளம்பப் படுகிறது. ஆகவே ஸத்தாகிய சித்தமே நாம ரூப, "**பிரபஞ்சம்**" ஆகவும், அதில் பந்தப்பட்ட, குடும்பி என்ற "**ஸம்சாரம்**" என்ற நாமம், தாங்கி வந்தது!

(B) இந்நிலை, இது எப்படி ஆனது? எப்படி வந்தது? என அதை, விசாரித்துப் பார்த்தால், அசையாத, அசைக்காத, ஒன்றான, "**ஸத்தே**" அசையும், அசைக்கும், நிலைக்காக, தானே, "**ஸத்**" ஆகவும், அதன் மறுவடிவமான, சித்தம் என, ஆனதாகவும் கொள்ள வேண்டும்!

(C) ஸத்தாகிய "**மனமே**" ஜகத், ஜீவ, அனைத்து **நாமரூபங்கள்**யும் தாம், விளையாடுவதற்காக தோற்றுவித்துக் கொண்டது!

(D) மனமோ, புத்தியோ, சித்தமோ, கற்பனையின் எண்ணங்களோடும் இம் மூன்றுக்கும், "**அஹங்காரம்**" இல்லையானால், விளையாட்டு சுவாரஸ்யமாக இருக்காது! அந்த அஹங்கார வடிவமானது:- **நான்/என்னுடைய/எனது!**
ஆகிய, அஹங்கார மமகாரம் என ஸ்ரீ மஹான்கள் தம் அனுபவத்தில், சொல்வார்கள்.

(E) மேலே சொன்ன மூன்றுமே (மனம், புத்தி, சித்தம்!) எம்மிடமே, தோன்றியது. விளையாடும் நிலைக்கும் உண்டான னது



எம்மிடமே விளையாடியது :— நாமரூப "

அழகு, கவர்ச்சி, வசீகரம், இவைகளால்

"சொந்தம், பந்தம், பாசம், பற்றுக்!"

மயங்கியதைப் போல் விளையாடியது!

எம்மிடமே அடங்கி விட்டது :— மேலே கூறிய, சொந்த பந்த பாச பற்றுகளால் விளையாட உப்பு, உறைப்பு, புளிப்பு, என்ற அஹங்கார, மமகாரம், இவைகளால் விளையாடி விட்டு அடங்கிக் கொண்டது!

இதில் கூறியபடி மனம், புத்தி, சித்தம், எம்மிடமே அடங்கியது என்றோ; ஒடுங்கியது என்றால்; அது விளையாட்டு, அது விளையாட்டு தொடரும். எனப் பொருள் படும்!

மேலே கூறிய மூன்றும், ஆத்ம ஞான விசாரணையால், அது நாம்! நாமே அது! என ஆகிவிட்டால், அங்கு அஹங்கார மமகாரம், அழிந்து நாசமான தன்மையால், மனம், புத்தி, சித்தம், என இம் மூன்றுமே, அடங்குவதும் இல்லை! ஒடுங்குவதும் இல்லை! சுவடு தெரியாமல் அழிந்தது, எனப் பொருள்படும்! அதுவே ஜீவன் முக்தியாகும்!

மறைந்தாகியது எனப் பொருள்

"எம்முடைய" லௌகீக கற்பனையால் நாமரூப, ஜகத் ஜீவ அநித்ய பொருள்களையும் "உண்டு"

என்று எம் மனம், புத்தி, சித்தத்தால் தேக்கி வைத்துக் கொண்டு, அஹங்காரத்தால், விளையாடினோம்.

"எம்முடைய" தெய்வீக கற்பனையால் எம்முடைய

அதனையும்

"அறிவினை" மனம் புத்தி சித்தம், அஹங்காரம் முழுமையாக, அழிந்த நிலையில்



உ

ஹயன்! ஹரி! ஹரன்! என்ற "நிர் கர்த்தாக்களாக" இருந்து, சிருஷ்டி! ஸ்திதி! ஸம்ஹாரம்! என்ற, முத்தொழிலையும், செய்வோம் என்ற "அறிவை" எம்முள்ளேயே அதையே மறையச் செய்து, "பேரறிவு" சொருபமாக, ஆகிக் கொண்டு, அகண்டாவிலை என்ற, அதாவது அகண்டாகார விருத்தி என்ற, அதாவது சர்வசாட்சி என்ற, "எம் நிலையில்" இருந்து, ஆனந்தம் அடைகிறோம்!

G "நனவு" எம் முன்னே, நடைபெறுகிறது!

"கனவு" எம் உள்ளே நடைபெறுகிறது!

"சுஷுப்தி" எம்முடன், இணைகிறது (கேவக்கவலீவு)

நனவு:- எம் ஆவலின்படி, யாம் சென்றும், பிறர் வந்தும், கைகால் கொடுத்தும்! வாங்கியும்! எம் "வாக்கால்" " " (காதுகால்) "சுகமாகவே" நடைபெறுகிறது!



கனவில் கர்மா சம்பந்த
பொருள் வருவதும் இல்லை
அது போவதும் இல்லை. (123)
அதே போல், கர்மா சம்பந்த
உடலும் பிரேதமாக கிடக்கிறது.
உடல் சஞ்சாரமோ, பொருள் போக்குவரவோ
இல்லாததால், அங்கு கர்மா நடைபெறாது.

கனவு :- **கர்மா** சம்பந்தம் இல்லாமல், எண்ணமும், அதன் சூட்சும காட்சியுடனும், நடைபெறுகிறது. காரணம் கர்மா சம்பந்த பொருள்கள் காட்டப்படுகிறதேயன்றி கொடுக்கப்படுவதும் இல்லை! வாங்கப்படுவதும் இல்லை! (இது பாவனா மார்க்கம்)

சுஷுப்தி :- கர்மாவின் பொருளும்! கர்மாவின் செயலும்! கர்மாவின் எண்ணமும்! இல்லாமல், இம்மூன்றுக்கும், காரணமான "**மனம்**" எம்முடைய ஆன்மாவில் "**லயமாகி**" இருக்கிறது. கவந்துதறைய வில்லை!

ஆகவே "**கர்மா**" இல்லை! இங்கு மனம், செயல்படவில்லை! ஆகவே நனவு, கனவு, சுஷுப்தி "**எமக்கு**" அன்னியமில்லை.

(H) மேலே சொல்லிய, இவை அனைத்தும் "**மாயாணை**" "**தின்**" (மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற எம்முடைய அந்தக்கரணங்களின்) செயல்களாகும்.

ஆகவே "**எமக்கு**" அன்னியம், எதுவும் இல்லை. "**ஸ்வாம்**" எமக்கன்னியம் இல்லவே இல்லை.



உ

சுத்த சிவத்தை சூரியனை (௧௨௪)
மேகம் மறைப்பது போல்.
மனம் மறைத்துக் கொண்ட
தன்மையினால். பர பாவனையும்,
சிவ பாவனையும், தொடர்ந்து அப்யாசம்
செய்து வந்தால். மனத்திரை விலகும்.
ஸ்வய ஆத்மஜோதி தானே பிரகாசிக்கும்!

மேலே கூறிய, இவை அனைத்தும், எம்முடைய
"சுத்த சிவ ஆன்ம" சொரூபமே யாகும்.
பவகாலம், இம்மனமானது பழக்க வழக்கத்தால் கேவி
தோஷத்தால் "மறைபட்ட" தன்மையினால்.
யாம் பரமே! பரமே யாம்! என பாவித்து! பாவித்து!
"பரமாகவே" இருக்கிறோம்.
யாம் சிவமே! சிவமே யாம்! என சிந்தித்து! சிந்தித்து!
"சிவமாகவே" இருக்கிறோம்.
ஸ்ரீஞானிகளின் ஸ்வய அனுபவம், யத் பாவம் தத் பவதி!
என்பதே ஸத்தியமானதே!

—×—×—×—×—×—×—

௨௭ பாடல் 78.

அகம் பிரம்மம்! ஜகம் பிரம்மம்! அகமே எல்லாம்! என்ற

(A) "ஆத்ம" ஞானமானது திட வைராக்கியத்தினால் உண்டாகும்.

(B) " " ஸத்குரு கிருபையினால் கிடைப்பதாகும்.

(C) " " இடையறா பழக்கத்தினால் உறுதியாகும்.

(D) " " அகண்ட சிவ அம்பாள் "ஸ்ரீபகவானின்" கிருபையினால் நிலைத்து நிற்கும்.

(25)



இ

பொருள் :—

(A) ஆத்ம ஞானமானது, திட வைராக்கியத்தினால் உண்டாகும்!

"ஸ்ரேயஸ் / ப்ரேயஸ்" என இரண்டை ஸ்ரீமஹான்கள் தம் அநுபவத்தில் கூறுவர்.

ஸ்ரேயஸ்:— ஸ்ரேஷ்டமானது! அதாவது அழிவில்லாதது! அதாவது 15 கலைகளிலும் இருந்து, 16 வது கலையாக உள்ளது! அதாவது ஆத்ம வித்தை என்ற ஜீவன் முக்தியாகும்! அதாவது புண்ணிய பாபம்! ஸத்கிய கர்மம்! லௌகீகம்! தெய்வீகம் இவைகள் எல்லாம் கடந்தது! "நன் அறியும் அறிவாளர்" சுத்த அத்வைத நிலையாகும்! இதுவே முடிந்த முடிவாகும்!

ப்ரேயஸ்:— ப்ரியமானது! சொந்த பந்த பாச பற்றிற்கு உட்பட்டது! மோஹ போகத்திற்கு உரியது! நாமரூப ஜட ஜீவ குணங்களுடன் கூடியது! தோற்றம், இருப்பு, மாற்றம், மறைவுக்கு உட்பட்டது! இன்ப துன்பத்திற்கு, அளவற்ற ஜனன மரணத்தை கொடுக்கக் கூடியது! ஆற்றலோடு கூடியது! "ஜனன மரண பீஜம்" (பிறப்பு பிறப்பின் வித்தான) [மயக்கமாகும்!

எந்த ஓர் சாதகனானவன், மேலே கூறிய இரண்டையும் "அறிவால்" அறிந்து உணர்ந்து "மனத்தை" அடக்கி, அதாவது மனதை மனத்தாக்கி ஈஸ்வரனே நாமே என உணர்ந்து, அதில் மோஹாக்காமம் கொண்டு அவர்களுடைய "பழக்கத்தை" விரும்பாமல்,



உ

பரமுக்தியாகிய "ஜீவன்முக்தி"யே தம் லக்ஷியமாக கொண்டு வெள்ளத்தில் ஓர் பட்டமரம் போலும் / குத்துக் கல்லும் போலும் / நான் அசையாமலும் / எதையும் அசைக்காமலும் இருக்கும் "திடவைராக்கியம்" வேண்டும்.

(B) ஆத்ம ஞானமானது ஸத்குரு கிருபையால் கிடைப்பதாகும். இந்த ஆத்ம ஞானமானது சிரவண / மனனத்தால் தாமேயவரிடம் கேட்பதாலும், தாமே வேத வேதாந்த அரிய பெரிய "கருத்துக்கள்" கேட்பதாலோ, படிப்பதாலோ / நெட்டுரு "மனனம்" பண்ணுவதாலோ, சாத்தியமாகாது. மேலே சொன்ன நூலியலில் பாடம் படிப்பு, இருந்தால் அது வாய் ஞானம் ஆகுமே யன்றி அனுபவ ஞானமாகாது. "ஏக்கம்" வேண்டும் என்றும் "வேகம்" வேண்டாம் என்றும், அனுபவ ஞானிகளின், அனுபவ வாசகம் இருப்பதால் ஞான வேட்கை உள்ள ஒருவன், அவசியம்



உ

ஓர் ஸத்குருவை தேடி அடைய வேண்டும்!

இதன் முக்கியம் என்னவென்றால்? "ஞான" வேட்கை உள்ள ஒருவன், ஸ்ரீ ஸத்குருவை தேடும் நிலையில், அவனுடைய, உபாசனா மூர்த்தியிடம் வேண்டி, அவ்வேண்டுதல் அவசியம். அவன் உபாசனா மூர்த்தியாகிய, ஸ்ரீ பகவான், ஓர் ஸத்குருவை "காட்டுவார்" அல்லது, அவனே ஸ்ரீ ஸத்குருவாய், "வருவான்!"

அந்த ஸ்ரீ ஸத்குருநாதனிடம், தம்மை முழுமையாக "அர்ப்பணம்" செய்யும் போது, அருளுடைய, பரிபூரண கிருபை பெற முடியும். இந்த ஆத்ம ஞானம், ஒன்றுக்கு மட்டுமே ஸத்குரு "கிருபை" இல்லாமல், ஸாத்தியமாகாது என, ஸ்ரீ அனுபவ ஞானிகள் சொல்வர்.

கேள்வி!

ஆத்ம ஞானமானது, இடையறாத பழக்கத்தினால் உறுதியாகும்:—

இங்கு இடையறாத பழக்கம் எனச் சொல்வது — ஒழுக்கத்தின் "பக்தி" ஆகும்! இது நிஷ்காமிய "கர்மாவினால்" ஸாத்தியமாகும். இந்த நிஷ்காம்ய கர்மாவே ஸ்ரீ பகவானிடம் "நிஷ்காம்யபக்தி"யைக் கொடுக்கும்.

எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உனதே! என்ற நிஷ்காம்ய கர்மாவானது, ஸ்ரீ பகவானிடம் அர்ப்பணமாய்,

(128)



உ

நிலைத்து நிற்கும், பக்தியாகிய,
அவனன்றி அணுவும் அசையாது!!!
என்றிட வைராக்கியத்தை கொடுக்கும்! அவன் நாம
விவேகமே, கர்மா நீக்கும் போது "சித்தசுத்தி"
இயல்பாகவே, உண்டாகிவிடும்! அச்சித்த சக்தியால்,
"சஞ்சித" கர்மா எரிந்து சாம்பல் ஆகும்!
"ஆகாமிய" கர்மா சேராது ஒழியும்!
"பிராரப்த" கர்மா, பாரமில்லாமல் அனுபவித்து முடிந்துவிடும்!
தெரிந்தும் தெரியாமலும், செய்யும் "கலிதோஷ"
கர்மாக்கள்; உன்னை போற்றுபவர்களுக்கு, உன்னுடைய
"புண்ணிய" கர்மாவும்! உன்னை தூற்றுபவர்களுக்கு
உன்னுடைய "பாப" கர்மாவும்! பகிர்ந்து கொடுக்கப்பட்டு
"நிஷ்பலனாய்" எதுவும் மிச்சம் மீதி இல்லாமல் துடைக்கப்பட்டுவிடும்!
ஆகிவிடும்! இங்கு உன் அனுபவங்களை, எப்படியானால் எனில்,
பக்தியின் நிலையில் — எல்லாம் நீயே! எல்லாம் உன்னாலே!
எல்லாம் உனதே! அவனன்றி அணுவும் அசையாது என்னும்;
ஞான அனுபவ நிலையில் — எல்லாம் ஒன்றே! அது சுத்த சிவமே!
அதுவாமே! யாவுமே அது என்ற "பரிபூரணத்வம்"
ஆகி "முடிந்து" விடும்! இதுவே இடையறா பழக்கம் ஆகும்!



ஆத்ம ஞான ஜோதியது, அகண்ட சிவ சுகமாய "ஸ்ரீ பகவானே" நிலைத்து நின்றே!

"அது" செயல்படாத ஒன்றல்ல! "அவனே" (ஸ்ரீ பகவான்) செயல்படக்கூடிய ஒருவனாகும்! எம் ஸ்ரீ திருமூலர் சொல்வது அகண்ட பரசிவ கருணையால் நிகழ்ப்பதாகும்! என்றார்.

இங்கு, எம் ஸ்ரீ திருமூலர், சொல்லும் அர்த்தம், அகண்ட சிவம்! என்றும்! பரசிவம்! என்றும்! அகண்ட பரசிவம்! என்றும்! சொல்லும் இன்னமும் "சிவ" நாமாவைச் சொல்லும், அர்த்தம்! "பர" கருணையும்! இறை கருணையும்! இதைத்தான் சொல்கிறார் என, உணர வேண்டும்! இங்கு ஈச கர்த்தவம் வாய்ந்த, எந்த கர்த்தாவையும் குறிப்பிடவில்லை, என்பதே சத்தியம். இவ்வி மந்திரத்தின் உண்மை, எப்படி ஆகிறது என்றால்? "பரமும், ஸத்குருவும்" ஒன்றேயாகும். பரம் செயல்படா ஒன்றல்ல! ஆனால் ஸத்குருவோ, ஸ்ரீபகவான் நிலையில், இருந்து கொண்டு ~~செயல்பட~~முடியும். அப்படி ஓர் ஸத்குரு, செயல்படும் போதுதான், ஓர் ஜீவனை பந்த நிவர்த்தி செய்து, அச்ஜீவனுடைய "பந்த அறியாமையாகிய ஜீவத்தன்மையை" அழிக்க முடியும்.



ஸ்ரீ ஸத்குரு இங்கு, ஸ்ரீ பகவான் கருணையை
தானே ஏற்றுக் கொண்டு, செயல்பட்டால்
தான், அஜீவனின், அறியாமையாகிய, ஜீவத்வத்தை
அழிக்க முடியும்! எப்படி என்றால்?

ஸ்ரீ பகவானுடைய, ஸ்ருஷ்டியை, நான், என்றால்!
எனது! புசிப்பிலேயே, ஓர் ஜீவன் ஜீவத்தன்மையை
பெற்று விடுகிறான். இங்கு ஸ்ரீ ஸத்குருவானவர்,
அச்ஜீவனிடம் பார்த்து — கொடுத்தே, ஸ்ரீ பகவானின்
மாயாவினால் தோன்றிய தோற்றத்தை, அஹங்கார
மமகாரத்தால், பற்றிப் புசிப்பதால், வினை பற்றியது!
வினையும் தொடர்ந்தது! அவ்வினையை, சர்வார்ப்பணத்
தலை
விட்டுவிட்டால், வினையும் முடியும். மேலும் வினையும்
தொடராது என்ற, அறிவுரையினால் அவன் வினையை,
ஸ்ரீ பகவான் கருணையினால் (சூரியனால்) உலர்த்துகிறார்.
வினை உலர்ந்த தன்மையினால், ஸ்வாமி ஒன்றே
அது சிவமே! அது ராமே! என்ற ஞானக்கனலை
வென்ஸ் சினால் எரித்து சாம்பல்
ஆக்கிவிடுகிறார். ஆகவே தான் இங்கு உள் ஸத்குருநாதர்,
இருகாரியங்களை "அதன்" கருணையினால் செய்கிறார்.

ஸ்ரீ பகவானாகவும் இயங்க முடியும்! ஸத்குருவாக இருந்து
பரகருணையையும் பொழிய முடியும்! ஆகவே தான் எம் ஸ்ரீ
அகண்ட சிவம் கருணையால்,
மௌனம், வாக்கியமானது நிஜத்தை நிரூபிக்கும் என்கிறார்!



உ

(131)

இப்பாடலில் மற்றோர் முக்கியம் என்னவென்றால்?

ஓர் பக்தரான, சாதனையாளனுக்கு, பூர்வ புண்ணியத்தினால், (A) ஸ்ரீ பகவான் காட்சியும், கருணையும் பெற முடியும். (B) ஸ்ரீ மஹான்களின், ஆசியும் பெற முடியும். (C) ஸ்ரீ ஸத்குரு தேவரின், கிருபையும் பெற முடியும். இம் மூன்றும், பெற்றாலும் பாடமும் "

அப்பக்குவ ஆன்மாவானவன் "**ஜீவன்முக்தி பெறமுடியாது**" எனப்பிரமாணமாக சொல்கிறார். "**காரணம்????**"

அப்பக்குவ ஆன்மாவுக்கு, நாம் ஜீவன் முக்தி பெற வேண்டும் என்ற, துடிப்புடன் ஏக்கமும்! அதாவது ஒருவன் தலையை பிடித்து, ஒருவன் ஜலத்தில் அழுக்கும் போது, ஜலத்தில் மூழ்கியிருப்பவனுக்கு, "**மூச்சு**" காற்று மட்டும் எப்படி அத்யாவஸ்ய **தேவையோ?** வேறு எதுவுமே எப்படி தேவை இல்லையோ! அப்படிப்பட்ட ↓ அந்நிலைமை



மாயாவும், அவித்யையும் (132)
உண்டு என்றால்
பரமாத்மா தாம்
விளையாடுவதற்காக
அவ்விரண்டையும் தனக்கே
தானே உண்டு பண்ணிக் கொண்டு
தனக்குத்தானே விளையாடுகிறது என உரைவேன்.

“தவிப்புறு”! அவன்
மோக்ஷம், பெறுவதற்கு வேண்டும் நிலையில்
தீவற்றிய ஒருவன், ஜீவத்தை நோக்கித்தான்
ஒருவனே தவிர “பெண். பொன்.” மோஹ போதைக்கு
நாடான்! தேடான்! அப்படி ஓர், உள்ளத்துடிப்பும்,
ஏக்கத்தின் உருக்கமும், “ஞான” வேட்கை
வேண்டும் என, ஸ்ரீ மஹான்கள் தம் அனுபவத்தை, கூற
கேள்விப்பட்டிருக்கிறோம்! ருது ஆகாத
கன்னிகைக்கு, எப்படி கர்ப்பம் தரிக்காதோ?
அப்படி நான் “ஸ்ரத்தை” இல்லாதவனுக்கு,
ஆத்ம ஞானம், சக்தியமாகாது என, ஸ்ரீ மஹான்
கள் சொல்லுவார்கள் என இதை முடிக்கிறோம்!

68 பாடல் 80/81
மறைப்பில்லாத, பிரம்மத்தையறியாமல், “மாயையோ”
“அவித்தையோ” இல்லை! “ஜீவனில்”
அழிவில்லாத, பிரம்மத்தையறியாமல், “சுகமும்” (திரிகாக்கரும்) இல்லை



உ

133

பரிபூரண, பிரம்மத்தை, பல்வாறாய் "பொய்யும் மெய்யும்" இல்லை,
அனைத்துக்கும் "காரணமான" பிரம்மம் மட்டுமல்ல,
"காரியம்" பொருள் எதையும் இல்லை!
அப்படிப்பட்ட, காலாதீத பர சொரூபமாகிய, பராப்
பிரம்மமே, மூலசிவம் (ஆதிசிவம்! மகேசன்!)
திரிகர்த்தாக்கள் (அயன்! அரி! அரன்)
ஐம்பூதம்! கோடானு கோடி அண்டங்கள்!
சராசரம்! அசராசரம்! "எல்லாமாய்"
தோற்றுகிறது. அப் பிரம்மம் அல்லாது, நாமரூப,
எந்த பொருளும், இல்லவே இல்லை
பொருள்: "மாயா" என்றால், இல்லாததை,
இருப்பதுபோல் காட்டுவது மாயாவாகும்!
"அவித்தை" என்றால், அப்படி தோற்றும், மாயாவில்
"மதி" மயங்குவது, அவித்தையாகும்!
"வித்தை" என்றால், உண்மை இன்மையை,
பிரித்தறிந்து, இன்மையை இல்லையென தள்ளிவிட்டு
உண்மையை, ஏற்றுக் கொள்ளும், "அறிவு" ஆகும்!
"ஜடம்" என்றால், அறிவற்ற! உணர்ச்சியற்ற!
கல் மண் மலை போல், அசைவற்ற ஒன்றாகும்!



# உ

(134)

மேலே கூறிய, மாயாவோ! அவித்தையோ!
வித்தையோ! ஜடமோ! இவை நான்கிற்குமே,
“ஆதரவாயும்” ஆதாரமாயும்!
இருக்கப்பட்டது அந்த காலாதீத பர சொரூபமே யாகும்!
இவை நான்குமே “ஜடப்பொருட்கள்!”
மண் மலை கல்! அனைத்து ஜீவசரீரங்கள்! ஸ்தாவரவர்க்கங்கள்!
என பொருள்படும்! உதாரணம் :- சிப்பியில் வெள்ளி!
போலும்; கானலில் ஜலம்! போலும்! கயிற்றில் அரவம்!
போலும்; கட்டையில் பேயாகவோ, கள்வனாகவோ!
வந்தது போல்; இருக்கும் “ஒன்றில்!” இல்லாத
“ஒன்று” தோன்றுவது, போலாகும்! ஆகவே இங்கு
ஒன்றை வைத்தே மற்றொன்று வந்து போன்றும் ;
“அந்த ஒன்று” இல்லாமல், மற்றொன்று,
தோன்றாது! தோன்ற முடியாது! தோன்ற இயலாது! ”
தோற்றியதோ! தோற்றுவதோ!
“மாயாவும்” அதன் மனமும்! இணைந்து
பிணைந்த விளையாட்டேயும் நிகழ்வியாகும்!



மனம், விதி, வினை
இவைகளால் பின்னவிட்டு
நடத்தும், ஓர் திட்ட,
மிட்ட நாடக,
நிகழ்ச்சியாமே!

(135)

ஜகத்தோ (அண்டபிரம்மாண்டங்கள், சூரிய சந்திராதி, அனந்த கோள்களும்)
ஜீவனோ (மனித இனத்தையும் சேர்த்து, 84 லட்சம் ஜீவ கோடிகளையும், சேர்த்த நிலையில், சரீராதிகள்)
ஈசனோ (திரிகர்த்தாக்களும், 33 கோடி தேவ தெய்வ, சூட்சும சொருபங்கள்) அனைத்து எல்லாமே
"மாயாவும்" / "மாயாமனமும்!"
இணைந்து பிணைந்து, நடத்தும் ஓர் திட்டமிட்ட
"நாடக விளையாட்டாகும்!"
ஆகவே இங்கு, தேவ தெய்வங்களை, "மாயா" என்றும்,
அனைத்து ஜக, ஜீவ சொருபங்களை, எல்லாம் "மனம்" "வினை" / "விதி" என்றும், "வாக்கால்" பேசியும், "வரிவடிவில்" எழுதிக்காட்டியும், பிரபல்யம் படுத்திக் கொண்டிருக்கிறது. அந்த ஒன்று!
ஆகவே "பழிபாபம்" இவைகளை, ஜக ஜீவ, ஈசுவராதிகள் மேல் சுமத்தப்படுகிறது!
பழி என்றால் "பழிச்சொல்" ஆகும்!
பாபம் என்றால் "பாபச்செயல்" என்று விளக்கம் தரப்படுகிறதென்று, ஞானிகள் சொல்வார்.



பராசரூபமும் யோக மாயா என்ற ஆகாயமும் இணைந்து பிணைந்ததாலே அனைத்து நாம ரூபங்களும் தோற்றமாக்கிரமமாக தோன்றுகிறது. அனைத்தும் பரம் என்ற மண்ணிற்கு அன்னியமில்லை! என்பதே ஸத்தியம். (136)

இனி 80/ 81/ பாடலுக்கு வருவோம்!

(A) முன் கூறிய, விளக்க நிலையில், உள் உணர்ந்து பார்த்தால், மாயாவோ! அவித்தையோ! வித்தையோ! ஜடமோ! "யோகமாயா" என்ற, ஆகாயத்திற்கும்! "பராசரூபம்" என்ற உருவமைப்பு மண்ணிற்கும் அன்னியமாயில்லையே இவை!

(B) "ஈசனும்" திரிகர்த்தாக்கள் என்ற ஸ்ரீவகையாலும் "ஜீவனும்" மனித இனத்தையும் சேர்த்து சுவபம் ஜீவ கோடிகளும்; "ஒன்றே" தவிர, இரண்டல்ல! பலவும் அல்ல! இது ஈ.ச & ஜீவ! விளையாட்டாகும்! இங்கு மாயாவும் மனமும் & வினையும்! சேர்ந்து விளையாடும் நிலையாகும்.

(C) இங்கு பொய் என்று சொல்லவும் முடியாது/ கூடாது, இயலாது! இங்கு மெய் என்று சொல்லவும் முடியாது! கூடாது! இயலாது! இங்கு மாயாவையும் & மனதையும் வைத்துப் பார்த்தால், அது பொய்யே! மாயாவையும் & மனதையும் விட்ட நிலையில், உணர்ந்தால் அது மெய்யே!



காரணம் என்றால், அதிஷ்டானம்!
காரியம் என்றால் ஆரோபம்!
காரணம் = பொன்! காரியம் = ஆபரணம்! காரணம் = இரும்பு!
காரியம் = ஆயுதம்! காரணம் = பஞ்சு! காரியம் = வஸ்திரம்!
காரணம் = மண்! காரியம் = பாண்டம்! காரணம் = மாதா பிதா!
காரியம் = குழந்தை! இதிலிருந்து, என்ன உணர்கிறோம் என்றால்?
"காரணம்" இல்லாமல், "காரியம்" இல்லை என்று
பொருளாகிறது. ஆனால் காரியம் இல்லையானால் காரணம்
இருந்தும், பிரயோஜனம் இல்லை! என்பது தெளிவாகிறது.
இதேபோல், ஸ்ரீபகவான் இல்லையானால், பக்தன் இல்லை!
ஓர் பக்தன் இல்லாமல், ஸ்ரீபகவான் இருந்தும் பிரயோஜனம்
இல்லை! இதேபோல், ஸ்ரீ ஸத்குரு இல்லையானால் ஸத்சிஷ்யன்
இல்லை! ஓர் ஸத்சிஷ்யன், இல்லாமல், ஸ்ரீ ஸத்குரு இருந்தும்,
பிரயோஜனம் இல்லை!
ஸ்ரீபகவானே! ஸ்ரீ ஸத்குருவோ! "தனித்து"
தான் தானாக இருந்தால், அதைச் சொல்வார் யார்?
அதைக் கேட்பார் யார்? அவரே! அதுவோ! ஒன்று
"இருக்கிறது" என்று, எப்படி யாருக்குத் தெரியும்?
அப்படியானால், காலாதீத அந்த "ஒன்று" ஆனது
காரண சொரூபமான ஒன்று, ஜகத் ஜீவ ஈஸ்வராதிகளாக,
"விளையாடிக்" கொண்டிருக்கிற தென்று
சொல்வதில் மெய்யும் இல்லை! பொய்யும் இல்லை!



உ

138

# புரிய வில்லையா????

நீங்கள் உங்கள் "மறைநிலையில்" இருந்து கொண்டு
அது உண்டு, எனச் சொன்னால், அது "மெய்யே!"
நீங்கள் "மறைநாசு" நிலையில் இருந்தால் அங்கு,
அது உண்டு என, எவரிடம் சொல்ல முடியும்? கேட்க
எவர் உண்டு? சொல்வதற்கான நீ தனியே உண்டா? அங்கு
"அதை" ~~இல்லை என தன்னுவாரும் இல்லாமையும்;~~
உண்டு என சொல்வாரும் இல்லாமையும்,
உண்டு எனக் கேட்பாரும் இல்லாமையும்;
"மறா மௌனம்" மட்டுமே இருக்குமே
போது அது "பொய்யே!!" இது என்ன, உணர்
திறமை என்றால்? அப்படியிருக்கும் "வாக்கே" பிரதானமாகத்
தெரிகிறது. பேசிப் பேசியே, இவ்வா உலகில்,
இருப்பு கொடுக்கிறோம்! பார்க்கிறோம், தேவதெய்வங்
கருக்கும், அது "உண்டு" என இருப்பும் கொடுக்கிறோம்.
"நாமும்!" "தெய்வமாகிய "அவனும்!"
அதுவாகிய, "பரமும்" ஒன்றாக இருக்கும் போது!
"யார் யாரை? உண்டு என்றும்! இல்லை என்றும்!
சொல்வது????????????



உ

(139)

அகவேசன், எம் ஸ்ரீ ரிபு மஹான் சொன்னார்.

"காரண" பிரம்மம் அல்லாமல், "காரிய"

"ஜகத், ஜகதீஸ்வரர்கள்!"

இல்லவே இல்லை யென, பிரமாணமாக சொன்னார்!

மண்ணில் பாண்டங்கள் இல்லை என்பது ஸத்தியம்.

மண்ணில் லாமல் பாண்டங்கள் இல்லை என்பதும் ஸத்தியமே.

இதே போல்!

காலாதீத பர சொரூபமே, "நாமே" நம் அம் ஸமான,

மூவகையென்ற, சுதா சவித்தை தோற்றுவித்துக்

கொண்டு, யோகமாயாவும் தாமும் இணைந்து, பிணைந்து,

"ஜகத்தை" தோற்று விக்கிறதும் தாமே திரிகரித்

தாக்காரக தோற்றமெடுத்து, "கடபாதி"

உண்டுபண்ணியதும் தம் கர்த்தாக்களைப்

போற்றிபுகழும் நிலையில் "க்ஷரம்!" ஹீ!

"அக்ஷரம்" நிலையில், வரிவடிவத்தையும்!

ஒலி வடிவத்தையும், உண்டுபண்ணி, "பர" சொரூபத்தையே

பிரம்மத்தையே பிணைப்படுத்தி உறையும் ஆற்றல் அரியா

மையின் மாந்தர், மனம் வசம் அகப்பட்ட தன்மையினால்

தம் கவனக் குறைவால் பகுக்கிறயும்!



# உ

வசதியான வாழ்க்கை
பொன் / பொருள்
பெண் இன்ப போகம்;
ஆகிய ஆடம்பர கோடீஸ்வர
வாழ்க்கையே வசதியும்
அசதியும் உண்டு!

140

உயரிய பிறவி என்று "வசதி யான" பிறவியை கேட்டு "அசதியை"யும், துவைதயான்மையுடன் கூடிய புண்ணிய பாபத்தை தேடிக்கொண்டு ஜனன மரணத்திலும் உட்பட்டு அல்லல் படுகிறார்கள் என்பவை அனைத்தும் "வாக்கிய" விளக்கமே என்று, உண்மை யாதெனில்! உண்மை என்னவென்றால்? காலாதீதபர சொரூபமே நாமே அனைத்துமாய் இருந்து கொண்டு மாயாவையும்! மனதையும்! வைத்து, விளையாடிக் கொண்டிருக்கிறது, என்பதே வாக்கியம்! மனம் வசம் அகப்பட்ட அறியாமையின், மாந்தர், உலகம் உண்டென்றும், வாழ்க்கை சுகம் என்றும், பிதற்றுகின்றனர்! ஆனால் உண்மையில்லை இருப்பது ஒன்றே! நடப்பது நாமே! அது யாமே!

x — x — x — x — x — x — x

## 29 "பாடல் ௬௪"

"நாமரூப" ஜகமும்! ஜீவர்களும்! இவை எவ்வாறே "குண" சம்பந்தம் கொண்டிருப்பதால், இவை அனைத்தும்; பேசப்பட்ட நிலையில், "வேறு" என்றும்!



உ

"யாம்" பகுத்தறிவுள்ள "மனித" இனத்தோர்

மனம் படைத்த நீ உயிர் "வேறு" என்றும்!

தாவரத்த பரசொருபம் "பிரம்மம்" என்ற நீ உயிர்,

"வேறு" என்றும்! மனதாலும்; வாக்காலும்!

பேதப் பகுத்து, யார்க்கும் இந்த "பேத" உணர்வாது,

"அகண்டபர" பாவனையால், ஒழிந்து

நாசமானதே யல்லவா; வேறு எந்த "கரும" உபாசனை

யாலும், அழிந்து நாசம் ஆகாது, என்பது ஸத்தியம்!

பொருள்:- மனம்! புத்தி! சித்தம்! அஹங்காரம்!

இவைகளால் "விகார" எண்ணங்களும்; அதைசார்ந்த,

"விகாரமான" பிரச்சனைகளும் அதைப்

பிறவிக்கு இயையும்!

வினையும், புண்ணிய பாபம் என்ற,

அகண்டான்ம பாவனையாகிய, எல்லாம் ஒன்றே! அது

சிவமே! அது நானே! என்ற பரபாவனையால் நாசமானதே

யன்றி, கர்மா! பக்தி! யோகம்! மந்திர ஸித்தி சக்தி, ஆகிய

எந்த "கர்ம உபாசனை" யாலும், நீங்காது

என்பதே ஸத்தியம்! நாமும் மேவே கூறிய, அந்த

கர்ம உபாசனைகளும் மனதால் செய்யும் காரியமானதே



உ



# இந்த "மனோநாசமானது"

மனம் மனோநாசமாகாத வரை, ஆத்மஞானம் சாத்தியமாகாது.
என்பதே அனுபவ ஞானிகளின் வாக்காக இருக்கிறது!

## 30 பாடல் 85 TO 91 / 92!

A அனைத்து மந்திரங்களையும்! அவைகளை, உபதேசம் செய்யும் குருவையும், அகற்றிவிடு!

B சுவர்க்கத்தையும், சந்தேகத்தையும், உண்டு பண்ணும், வாக்கையும், வழிவழி வந்ததையும், அகற்றிவிடு!

C காமம் குரோதாதி ஆறுகுணங்களையும், வியாபாரம், விளம்பரம், ஆடம்பரம், இவைகளையும் அகற்றிவிடு!

D நாமரூபங்களையும், நான்! நீ! அவன்! அவர்! அது! இது! என்ற அனைத்து கற்பனை வாக்குகளையும் அகற்றிவிடு!

E நிரந்தரமான, அறிவாயும்! பேரறிவாயும்! உள்ள நம்மிடமே, இக்கற்பனை உலகம், தோன்றியது!

F உலகம் சத்தியமானால், அது நம் ஆழ்ந்த, உறக்கத்திலும், இருக்க வேண்டும். அப்படி இவ்வுலகம், இல்லாததால், இவ்வுலகம் இல்லவே இல்லை!

G நம் மனோ விருத்தி தோன்றும் முன்பும், இவ்வுலகம் இல்லை!
,, ,, ,, அழிந்த பின்பும் ,, ,, !
இடையில், வந்து, போனதும், இவ்வுலகம், இல்லவே இல்லை!

H கடாகாயமும்! மகாகாயமும்! ஒன்றே! இவ்விரண்டிற்கும், குடம் என்ற உடமையே, உபாதை! குடத்தை நீக்கி விட்டால், ஆகாயம் ஒன்றே!



உ

(143)

I "சிவோஹம்" என்பதும்,
"தத், த்வம், அஸி" என்பதும்,
"ஜக, ஜீவ, பர" ஐக்கியமாகும்!

J. "கற்பனையான" "ஜீவ, பர"
உபாதைகள், களைந்தெறிந்தால், பர ஜீவ ஐக்கியம்
பெறமுடியும். இதற்கு ஆயமறை "பேதம்" அகற்றப்படவேண்டும்.

பொருள் :- (A) பஞ்சாக்ஷரமோ! சடாக்ஷரமோ!
அஷ்டாக்ஷரமோ! பீஜாக்ஷரமோ!
மற்றும், "கோடானுகோடி" மந்திரங்களையும்! இவைகளை, ஓதும் "குரு" மார்க்கமும்
ஒதுக்கிவைத்துவிடு! காரணம் இவை அனைத்தும், "சக்திகள்" தான் கொடுக்கும்! அஷ்டசக்திகள்
அஹங்காரத்தையும்! அதிகாரத்தையும்! ஆதிக்கத்தையும்!
கொடுக்குமேயல்லாது "ஜீவன்முக்தியை" கொடுக்காது என்பது ஸத்தியம்.



# வாக்கை நிறுத்த முடியாது!

இதமாக பேசு. மிதமாக பேசு. இறை குரு உணர்வுடன் பேசு. பிறர் மனம் புண்படுத்தும், வார்த்தை பேசாதே. மேலே கூறிய நியதிப்படி, கூறியபடி, அப்படிப்பட்ட "உணர்ச்சிகள்" தானே "வரி"வடிவ "நூல்கள்" படிக்காதே! கேட்காதே!

"வியாபாரம்:- பலன் கருதும் கர்மாவும் வேண்டாம்! பலன் கருதிய பக்தியும் வேண்டாம்!

"விளம்பரம்:- தானதர்ம ஸத்கர்மாவோ, பக்தியையோ, பிறர் மெச்ச செய்ய வேண்டாம்! "விளம்பரப்படுத்தி செய்தால் "வீண்" பெருமை!

"ஆடம்பரம்:- உணவோ! உடையோ! இருப்பிடமோ! டாம்பீகம் என்ற, ஆடம்பரம் வேண்டாம்! வாக்கில் இனிமையும்! வாழ்க்கையில் எளிமையும்! சாதனையில், பொறுமையும் வேண்டும்! மேலே கூறியவைகளை, கடைப்பிடித்தாலே "நய கலிதோஷ"ங்கள் அனைத்தும் நாசமாகும்!



D) எல்லாமாகிய, அந்த "நாம ரூபங்களையும்! மறந்தாகிய" "பரமாகவே உணர்!" அங்கு அடங்கு! அங்கு அடங்காதே! அனைத்தும் உன்னுள் அடங்கும்! அங்கு நான்! நீ! அவன்! அவர்! இது! அது! என பலபல விதமாக, விகாரம் அடைந்து, விவகாரம் பண்ணவேண்டாம்! இருப்பது ஒன்றே! நடப்பது நாமே! என ஒன்றில் நிலைத்திரு!

E) அந்த நாமரூப தோற்றங்களாகிய கோள்களும் சூரிய சந்திராதி நட்சத்திரங்களும் மண், மலை! தாவர வர்க்கங்கள்! அனைத்து ஜீவ கோடிகளும்! "த்ரிகோணத்தாக்கமாகிய நம் அறிவால்" பிரகாசிக்குது! "ஆகாசமாகிய, நம் பேரறிவால்" எல்லாம் ஒன்றே! அது நாமே! என்ற அகண்டாகார விருத்தியாகிய, சர்வசாட்சியில், ஒன்றி விட்டன!

F) இந்த நாமரூப உலகமும்! அனைத்து பொருள்களும்! உறவு, சுற்றம், நட்பு, துணைவர், மனைவி, குழந்தைகள்,



இ மமை விருத்தி என்பது:- (1½+6)
உறங்குவது போல்
சாக்காடு என்றும்,
உறங்கி விழிப்பது போல்
பிறப்பு என சொல்வதால் உன்
எண்ணமே உலகம்! எண்ணமின்றி
ருப்பதே மோக்ஷம் ஆகும்!

உண்மையாகவே இருப்பது சத்தியமான
ஆழ்ந்த எம் "உறக்கத்திலும்"
இருக்க வேண்டும். இங்கோர் கேள்வி உண்டாகும்?
நீ தான விழிப்பாயால், மற்றவன் தான் இருந்தேன். எனக்
கேட்கலாம்? யாம் திரும்பவும், கேட்கிறோம்?
யாம் தூங்குபவன், எழ முடியாமல், அப்படியே ஒரே,
"தூக்கமாக" தூங்கி விட்டால் எமக்கு ~~சொல்லுங்கள்~~
இவ்வுலகமும், அனைத்தும் ஒருபிரயோஜனமும் இல்லையே.
அப்படிப்பட்ட இந்த "மாயா உலகம்"
இருந்தாலென்ன? அது போனாலென்ன? ஆகவே,
இவ்வுலகமும், பொருள்களும், உறவும், எல்லாம் பொய்யே.

ஏ மேலும் இவ்வுலகமும், அனைத்து பொருள்களும்,
உறவு, சுற்றம், நட்பு, அனைத்தும் "மமை
விருத்தியே" அல்லாமல், உண்மையில் இல்லை.
சங்கல்பமே உலகம்! சங்கல்ப நாசமே
மோக்ஷம்! அதாவதாம் எண்ணமே, உலகமாகும்!



உ

(147)

(H) ஓர் குடத்தினுள், உள்ள ஆகாயமும், அதைப்போல், ஓர் தாவத்தினுள்,
உள்ள ஆகாயமும், பரந்து விரிந்து எங்குமாய், "
ஏகமாய் உள்ள "ஆகாயமும் ஒன்றே!
இங்கு குடமும், உடலுமே, "உபாதை" (தடை)
ஆம், அவ் விரண்டும் நிலையில்லாதது, ஆனால்
ஆகாயம் நிலையானது, இதைப்போல, பரமாகிய
அந்த ஒன்றே ஸத்தியம், மற்றும் அனைத்து நாமரூபமும்
பொய்யே, என்பதே ஸத்தியம்!

(I) சிவம் + அகம் = சிவோஹம், அதாவது சிவமே
யாம், யாமே சிவம், என்பதே ஸத்தியம்!
இதைப்போலவே, கற்பக ஸ்ரீபகவானும், ஜீவம் படு
ஜீவாத்மாவும், அனுபது பரம் பொருளும்,
மூன்றும் ஒன்றே, ஒன்றே அம் மூன்றுமானவை!
அதுவே யாம், யாமே அது!

(J) ஏகாக்கிரமாக கற்பனையதைக் கொண்டிய "ஜீவ
ஆத்மாவும்" தெய்வீக கற்பனையால்,



உ

தோன்றிய அஞ்ஞானகிய "மாத்மாவும் பர" ஒன்றாக இணைந்த நிலையில் அதாவது:— படைத்தவனும் (நாயகியும்) சக்ரவர்த்தியும்! "ஞாழலாம்"

பேதம் காணப்படுகிறது, தொடர்ந்த விட்ட நிலையில், அதாவது படைத்தவன் தம் வேஷம் களைந்த நிலையிலும், சக்ரவர்த்தியும், தம் வேஷம் கலைந்த நிலையிலும், "மனிதன்" என்ற நிலையில் இருவரும் "ஒருவரே" துவாரா, இருவரல்ல. என்பதே ஸத்தியம் இங்கு???

பர ஜீவ ஐக்கியம் :— இங்கு பரமாத்மா எனச் சொல்லும், அஞ்ஞானியும் ஜீவாத்மா எனச் சொல்லும், ஆத்மாவையும், ஒன்று படுத்த வேண்டும்!

ஆய மனோபேதம் :— மனோ நிலையில், அனைத்து நாம ரூப பேதத்தை நீக்கி விட்டால், அங்கு நமக்கு அன்னியம், எதுவும் இல்லாத நிலை ஏற்படும்/ ஆகவே நாம ரூப பேதம் களையப்பட வேண்டும் பரமாத்மா ஜீவாத்மா, ஐக்கியமாக வேண்டும், இயல்பாகவே எல்லாம் ஒன்றாகி விடும்!



உ

பாடல் 940

**31** "மனதுக்கும் அதீதமாகி"!

"மாயாசமரத்துக்கும்" ,, !

"நாமரூபம்" எல்லாவற்றிற்கும் ,, !

ஜாக்ரதா! ஸ்வப்னம்! சுஷுப்தி! அவஸ்தைக்கும் ,, !

"பேரறிவு" சொரூபமான, அகண்ட பரப்பிரம்மமான, அந்த ஒன்றே, "ஸத்யம்"! என்ற ஸ்வய அனுபவ நிலையில், அமர்ந்தவன்னைம், சந்தேக கலக்க பயம், மனோநாசமானவ், அதுவாகவே இருப்பாய்!

பொருள்:— "மாயா" என்றால், உண்டுபண்ணுவதும், உண்டுபண்ணியதை, அழகு வசீகரம் கவர்ச்சியாக மாற்றுவதும், (தோற்றம், இருப்பு, மாற்றம், மறைவு, இவைகளை உண்டாக்குவதும்) மாயாவின் அதிபதியாகிய, ஸ்ரீ பகவானுக்கு பெருமை தேடித்தருவதும் ஆகும்!

"மனம்" என்றால், அப்படி உண்டுபண்ணப்பட்டதில், அதாவது தோற்றத்தில் மாற்றம் உண்டாவதை, தம் கவனக்குறைவால் மறந்த பாவனையில் அறிவு மாற்றம் அடைந்து,



உ

வினையையும், விதியையும்! சுட்டிக்காட்டி, வினை வழியால் நடைபெறும், திட்டமிட்ட காரியங்கள், திட்டமிட்டபடி நடந்தாலும், அறியாத பாவனையில் "அஹங்கார மமகாரத்தால்" சூழப்பட்டது போல், இருந்து கொண்டு, புண்ணிய பாப வினைகளாலதனை மறைச் சுழலில் சுழலும் வகையைப் போல், பாவனை செய்வது மனமாகும். இதை ஓர் நியதியால், சொல்வது என்றால்?

"மனம்:- { அறிந்த வித்து! / அறியாத பாவனை!!

இதை உணர்ந்தவர் உணர்வார்! உணராதவர் உணரார்!!

எம் ஸ்ரீ பிரமஹான், ஏன் இந்த "மனத்தை" என்ற, ஓர் பெரிய வாக்கியத்தைப் போட்டார் என்றால்?

மாயா வேறு! மனம் வேறு! அவ்வ என்ப தே லக்ஷியம், "உண்டாக்குவது மாயா! மயங்குவது மனம்! அம்மயக்கத்தால், தோன்றுவது புண்ணிய பாப "வினை"! அவ்வினையின்படி சூட்சுமமாய் நடத்துவது, "விதி" என்ற சூட்சும ஸ்ரீ பகவான் ஆகும்.

பாடல் ௧௫



மனம் மலினம் என்ற நிலையில் மனமே ஜகத்து ஆகும்! மனம் மலினம் ஆக வில்லையானால் மனமே மஹத்து ஆகும்! (151)

மலினம் :- நாம ரூப, ஜக, குண, மயக்கமாகும்!

மாயாவும்! மாயாமனமும்! இணைந்து நடத்தும், இந்த நாடகத்தில், அறியாமை என்ற, கவனக்குறைவால் மனம் மயங்குவதால், அதை "மலினம்" என்றும், மயங்க வில்லையானால், மனம் "மஹத்து" என்றும், ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

இங்கு அவிவேகி மயங்குவான்! இங்கு விவேகி மயங்கான்!

அவிவேகி மயங்கிய நிலையில், நாம ரூப சொரூபம், "ஜகத்தாக" மாறும்!

விவேகி மயங்காத நிலையில், நாம ரூபம் இயல்பாக மறைந்த நிலையில், "மஹத்தாக" அந்த ஒன்றாகவே இருக்கும்! என் அனுபவ ஞானிகள் கூறுவர்

"வினையோ? விதியோ?"

மனம் மயங்கிய நிலையில் தோன்றி அது ஜகத்தாகும், மனமயக்கம், இல்லாத நிலையில், விதியும் இல்லை! வினையும் இல்லை! அங்கு மனம், மஹத்தாகவே இருக்கும்! ஜகத்தும்! மஹத்தும்! மனோபாவனையைப் பொறுத்திருக்கிறது!



உ

"மனம்" மயக்க பாவனையில், இருந்தால், "வினை" பெருகும்! வினை பெருகும் போது "விதி"தானே விளையாடும்! மனம் மயங்க வில்லையானால், வினையும் பெருகாது! விதியும் விளையாட முடியாது! விளையாட இடமில்லை! "மனம் மயங்காதநிலை" எதுவென்றால்? நாமரூப ஜகத்தை "உண்டு" எனத் தோற்றும் வரை, ஸ்ரீபகவான் பொருளாகவும்! ஸ்ரீபகவான் செயலாகவும்! உணர்ந்தால் மனம் மயங்க வில்லை! அங்கு அவன் பார்த்துப்பான். நாமரூப. ஜகம், வியாபாரமும், வ்யவகாரமும் (பிரச்சினையும்) அடையாத நிலையில் "இல்லை" எனத் தோற்றி விட்டால், ஸ்ரீபகவானே "நீ ஆன தன்மையிலே", அந்த சரீராபிமானம் "தானே நின்ற" நிலையில், எல்லாம் ஒன்றே! அது சிவமே! அது நானே! என்ற "அத்வைதம்" பிரகாசித்து, விடும் பின் அங்கு, உனக்கு எந்த பயிற்சியும்! முயற்சியும்! இல்லா தொழியும்.



உ



ஆகவே நான், எழுதிய இப்பாடலில்,

(A) மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் என்றும்,
"காரணங்களுக்கும்" அதீதமானது என்றும்,

(B) மாயாவின் மறைத்தான செயல்களுக்கும், " " ,

(C) ஜாக்ரதா, சொப்பனம், சுழுப்தி, அவஸ்தைகளுக்கும் " " ,

(D) நாமரூபமாயுள்ள எல்லா வற்றிற்கும், " " ,

இந்த நான்கு நிலைகளையும், அடிக்காட்டி
இவைநான்கிற்கும் "காரணமானது"
அந்த ஒன்றே என்றும், மற்றும் இதில் கூறும், நான்கும்
அந்த ஒன்றின் "காரியப்பொருள்" என்றும்
ஸ்பஷ்டமாகவும், தெளிவாகவும் குறிப்பிடுகிறார்.
ஆகவே மனம் "மலினமானது" ஜகத்காரி
தோற்றங்கள், கனவு நிலையில் உண்டு என்றும்,
மனம் "மஹத்தானது", "ஸத்" ஒன்றே,
உண்டு என்றும். உணர் வேண்டும்! ஆகவே!
ஜகத்தும்! மறைந்தும்! உன் மனமே யன்றி வேறில்லை
"பிரம்மம் ஸத்தியம்" என்றும்; "ஜகத் மித்தை" என்றும், அனுபவ மஹான்கள் கூறுவர்!



பாடல் 95 / 96 /

# 32 "ஸித்தாகாயம்" = இதய ஆகாயம்!

என்ற பொருள்படும் 95 வது (ஸிதாகாயத்தில்) பாடலில் குறிப்பிட்டபடி சுத்த ஸிதாய மகாம், (அங்கு) பிரபஞ்சம் என்பது என்றுமே இல்லை என்னும்; அமைவது, சுத்த ஸிதாகாயமகாம் நிஷ் பிரபஞ்சம்;

சொரூபத்தில் பிரபஞ்சம் என்னும் இல்லை! என்று ஸ்பஷ்டமாக கூறிவிட்டு, அடுத்த வரியில்;

இந்த "த்வைத" பிரபஞ்சமானது பரமார்த்தத்தில்; (தாவாதீத பரசொரூபத்தில்) "இறையனாரும்" இல்லையென அதீதம் நிருத்தமாக கூறிவிட்டு) இல்லை! ஆனாலும்; "வியவகாரத்தில்"

(வேறில் வேறியே விகாரம் உண்டு என்ற வியவகாரம் என்ற குணதோஷப் பிரச்சனைக்கு, ஆளாகிய தன்மையால்;)

ஸத்தின்! தன்மையில் சத்தமாக! விளையாடிய தன்மையினால்; பெரிய "அநுபவ" பிரபஞ்சம் என தோன்றுகிறது! எம் புத்திரா! அந்த சித்தத்தை,

(ஸத்தாக உணர்ந்து) யாம் புகன்ற வண்ணம், பூரணமான பிரம்மபாவனையால், வெளியாக!



இரண்டு இல்லாத "ஒன்றை"
ஆழ்ந்த உறக்கத்தில் "ஏகமான" ஆத்மாவிடம்,
இந்த மாயாமனமானது, இணைந்து, பிணைந்து, சேர்ந்து
(தூக்கமற்று) இருக்கும் சமயம், சற்று ரவணிப்பாடாக இருக்கும்போது அது (மனம்) "கனவாக" தோற்றுகிறது.
அக்கனவில், கர்மா சம்பந்தம் இல்லாமலேயே, நாமரூப,
பொருள்கள், வருவதும், போவதும்! கொடுப்பதும் வாங்குவதும்!
பண்டப் பரிவர்த்தனைம், மாயா ஜால நிலையில்,
(விழித்தால் இல்லை) நடைபெறுகிறது. அதே போல்,
தாவரங்கள் பரசொருபமும், நம் அம்ச நிழலான, யோக
மாயாவுடன், சேர்ந்து, இணைந்து, பிணையும் போது.
"ஜக ஜீவ (சொருபங்கள்) ஈஸ்வராதிகள்!
வந்து போகின்றன!" நியாய் நிவர்த்தி ருப்பதில்லை.
இவ்வு மாயாவின் மைந்தனை "மனமானது"
தம் கற்பனையினால், இப்படி தனக்குத் தானே, தோற்று
வித்துக் கொள்கிறது. இப்படி கற்பனையில், தோன்றும்
தோற்றங்கள் மறுவிருத்தியால் ஸர்வத்
தான்/ ஸ்வப்ப னடவது போல், தெரிகிறது. ஆனால் இவை
உண்மையில் இல்லவே இல்லை.



உ

156

பொருள் :- முன்பு ஓர் பாடலில், குறிப்பிட்டபடி,
குடஆகாயமும்! மஹா ஆகாயமும்! எப்படி பேதம் இல்லையோ,
அங்கு குடமே உபாதி பேதமாகவும்! குடத்தை அகற்றி
விட்டால், அவ்விரண்டு ஆகாயமும், எப்படி ஒன்றேயாகுமோ!
அதேபோல் இப்பாடலிலும், இதய ஆகாயமும் ஸிதாகாயம்
என்ற இதய ஆகாயமும் வெட்டவெளியாகிய மஹா ஆகாயம்,
ஆகிய இவ்விரண்டும், ஒன்றே இங்கு இதயமே உபாதிபேதம்
ஆகும். இதயம் என்ற நாமரூபத்தை களைந்தெறிந்தால்,
இரண்டும் ஒன்றேயாகும்! அப்பாடலில் சொன்னதோ,
கடஆகாயம் என்பது நம் தேகத்தை சுட்டிக்காட்டி, அதை
குடஆகாயம் என்றார் இங்கு உடலினுள் உள்ள இதயத்தை
சுட்டிக்காட்டி, இதய ஆகாயம் என்கிறார்!
இங்கு ஏன் இதயத்தை சுட்டிகாட்டுகிறார் என்றால்?
இதயமே "எண்ணங்களின்" பிறப்பிடமும்
இருப்பிடமுமாகும்! ஆகவேதான் இப்பாடலில்,
சுத்த ஸிதாகாயமாம் "நிஷ்பிரபஞ்சம்"!
(அந்த) "ஸொரூபத்தில்" பிரபஞ்சம் என்பதும் இல்லை!
என்றார். அதாவது, எண்ணம் தான் உலகமே! தவிர
எண்ணமின்றில் உலகமே இல்லை! என்பது ஸத்தியமாகும்
இதையே ஸ்ரீமஹான்கள் சொல்லும் போது — ஸங்கல்பமே
உலகம்! ஸங்கல்ப ராஹித்யமே மோக்ஷம்! என்றார்கள்.



157

உ

தாவரத்த பரசொரூபத்தில் தான், "ஆகாயம்" என்ற,
"யோக மாயா" உண்டானதே தவிர, யோக மாயாவில், பரசொரூபம், தோன்றவில்லை என்பதே சத்தியம். அதேபோல் யோகமாயா என்ற, ஆகாயத்தில் தான், அனைத்து கோள்களும், அண்ட பிரம்மாண்டங்களும், உண்டாயினவே தவிர, மேலே சொன்ன, அனைத்து உலகங்களிலிருந்தும், ஆகாயமாகிய, யோக மாயா தோன்றவில்லை! யோகமாயாவாகிய "ஆகாயமே" அனைத்திற்கும்.

"ஆதாரம்! "ஆதரவு! "ஆகாரம்!"

என்பதே சத்தியமாகும்! இங்கு ஒர் உண்மையை உணர்! சுத்த "பரமாக" இருக்கும் போது அது "அத்வைதமே! அதில் யோகமாயாவின், உதவியால், உலகம் என்று ஒன்றுண்டாகும் போது, அது "துவைதமே!"

இதையே — மண்ணில், பாண்டங்கள் இல்லை! என்றும், மண் இல்லாமல், பாண்டங்கள் இல்லை! என்றும், அனுபவ ஞானிகள் கூறுவர். இங்கு மற்றோர், சத்திய வாசகத்தையும் உரைவாம்! அதாவது?

இத்துவைத பிரபஞ்சமானது, பரமார்த்த நிலையில் "இணையாவும்" இல்லையென்றாலும், "விகார" நிலையில் மட்டும் உண்டென பேசப்படுகிறது!




உ

ஆனால் உண்மையில் இல்லை என்றால்

அதாவது, வாக்கிய விளக்கத்தில், உலகியல் என்றும், பரமார்த்திகம் என்றும், சொல்லலாம்.

இங்கு பரமார்த்திகம், இரண்டாக பிரிக்கப்படுகிறது.
பரமார்த்திகம் என்பதை, தெய்வீகம்! பரமார்த்திகம்! எனவும் சொல்லலாம்!
இங்கேன் இது, இரண்டாக பிரிகிறது என்றால், ஓர் நிலையில் பரமார்த்திகம் என்பது "பரசொரூப" நிலை என்றும், மற்றோர் நிலையாய் "தேவதெய்வங்களின்" இருப்பிடமும்! உறைவிடமும்! ஆகும் என்றும், அதை "இறைநிலை" என்ற, தெய்வநிலை என்றும் சொல்லலாம்.
அங்கு ஆகவேதான் இப்பாடலில், நாம ரூப ஜக ஜீவர்கள் வெளிக்க உலக "த்வைதம்" இல்லை என்றும், அதேபோல் ஈஸ்வராதிகளின் "திரிகர்த்தாக்க முக்கோடியின்" இருப்பிடம், உறைவிடம்! மற்றும் தேவ தெய்வங்களின் இருப்பிடமும்! உறைவிடமும்! அங்கு இல்லை என்பதையே! "இறையனாவும்" இல்லவே இல்லை! இல்லவே இல்லை! இல்லவே இல்லை! என்றார்.


(இறையனாவு = ஸ்ரீபகவான் நிலையில் கூட இல்லை)



மேலும் ஓர் முக்கியம், என்னவென்றால்?
அந்த நாமரூப உலகமானது, நிரந்தர "இருப்பு"
உடையதல்ல, என்பதே ஸத்தியம்! எப்படி என்றால்?
நேற்றையது இன்றில்லை! என்றும், இன்றுள்ளது நாளை இல்லை!
என்பதும், யாவரும் அறிந்ததே! இதனை உணர்வது? "
அந்த "மாற்றம் / மறைவு" களால்
மனதில் தோன்றும் எதிர்பார்ப்பினால், "ஏமாற்றமே"
உண்டாகிறதேயன்றி, "நிறைவு" தோற்றுவதில்லை.
இதைப் போலவே, உறவு, சுற்றம், நட்பு, இவை
களிலும், மனதின் விருப்பு வெறுப்பினாலும், "குண
தோஷங்கள் தான், பின்னிவிடுகின்றதே தவிர, அங்கே
"நிறைவு" தோற்றுவதில்லை! உலக இருப்பும்,
உலக இயக்கமும், பொருளாலும், உறவாலும் தான்,
நாமரூப ஜகத்திற்கு, இருப்பு கொடுக்க முடிகிறதேயன்றி,
வேறொன்றுமே இல்லை, என்பதே ஸத்தியம்! மேலே கூறியவை
களை, சற்று உற்று உணர்ந்து பார்த்தால் ???????



ஸத்தாகிய, ஸித் சொரூபமே,
“சுத்தமாக” தோன்றி, விளையாடவும், அதுவே
“மறைவடிவில்” பின்னவிடவும், அப்பின்னவே
“குணதோஷமாகி” புண்ணிய பாவத்தையும்
அதனால் “பிறவித்தளையையும்” உண்டு
பண்ணுவதால், முடிந்த முடிவாக நம் சாதனை எப்படி
இருக்க வேண்டுமென்றால் “அசையும்” நிலையில்
ப்ரியதவாறகவும்! “அசையா” நிலையில் எல்லாம்
“ஒன்றே” “என்ற” “பர” நிலையாகவும், அதுவே
நாமாகவும், உணர்ந்தால் போதும்! மேலும்
ஆழ்ந்த உறக்கத்தில், நாம் ஆத்மாவுடன், நம்
மனமானது, ஒன்றாக இணைந்து பிணைந்து, இருக்கும்
நிலையில், சுகமாக தூங்கினேன் என்றும்; ஆனந்தமாக
தூங்கினேன் என்றும்; ஸ்வய அனுபவ நிலை இருப்பது போல்;
நாம் அன்றும், இன்றும், என்றென்றும், காலாதீத
“ஆனந்த” சொரூபமே என, உணர்ந்து துன்பம்
நீக்குவோமாக!



மேலும் ஓர் மெய்யுணர்வு, எப்படி இருக்க வேண்டும், என்றால்:- "கலையின்" நிலையால், நாம ரூப பொருள்கள், கர்மா சம்பந்தம், இல்லாமலேயே, வந்து போகின்றன! அதேபோல் தாவாதீத பர சொரூபமும், நம் அம்ச, மனத்தின் (சதா சிவம்! மகேசன்) நிலையாகிய, யோகமாயா வுடன், இணைந்து பிணையும் போதுதான்; "ஜகத்தும்! ஜீவ" சொரூபங்களும்! "ஈஸ்வராதி" தோற்றங்களும்! வந்து போகின்றன! "மாயா" வானது, மனத்தின் நிலையால் விளையாடுகிறது! "மனம்" ஆனது, "ஜகத்தின்" "நிலையாய்" எதுவுமே இல்லையென, இங்கு இரண்டுமே உணர்ந்தும் மனமே அசைவாகிய, சஞ்சலத்தை, நீக்கவேண்டும். இவ் விரு விளையாட்டையும், விளையாட்டாக கருதாமல், வினையமாக "வினையாக!" "புண்ணியபாவமாக!" கருதி, மனம் வசம், அகப்பட்ட மாந்தர்கள் தம் கவனக் குறைவால், உலகம் உண்டு என மயங்குகின்றனர்! ஐயோ பாவம் மாந்தர். இது உண்மை இல்லை என்பதே சத்தியம்!

த.... பாபா.


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Abode of Love
You Are Everything!